திருமுறை யாத்திரை



கலைஞர்
ஏ.பி.நாகராஜன்

பாரதி
பதிப்பகம்

திருமுறை யாத்திரை

கலைஞர்
ஏ. பி. நாகராஜன்

பாரதி பதிப்பகம்
தியாகராய நகரம் : : சென்னை-17.
1962 — 1.50

முதற் பதிப்பு: ஜனவரி, 1962.

விலை ரூ. 1-50.

புரோகிரசிவ் பிரிண்டர்ஸ், சென்னை-1.

முகவுரை

புண்ணியந்தேடி நற்பலன்களை அடைய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்று வருவது தொன்று தொட்டு நம் தமிழ் நாட்டில் நிகழ்ந்து வரும் பழக்கமாயுள்ளது. பல தலங்கள் சென்று பரமனை வேண்டி, புற யாத்திரை செய்து வருவது போல இறைவன் மேல் அடியார்கள் பாடியுள்ள பன்னிரு திருமுறைகளில் அகயாத்திரை செய்வதும் இறைவனுக்குச் செய்யும் தொண்டுகளில் ஒன்று எனச் சிறியேன் எண்ணினேன்.

"திருமுறை யாத்திரை" என்ற தலைப்பிலே ஒவ்வொரு திருமுறைக்கும் ஒவ்வொரு பாடல்களை எடுத்து உரை எழுதி என் சிற்றறிவுக்கு எட்டியவரை சிறு பணி செய்துள்ளேன். குற்றமிருப்பின் பொறுப்பது சான்றோர் கடமை. மனிதன் வாழ்ந்த காலத்தையும் வாழப்போகும் நாட்களையும் கணக்கிட மாதங்களைப் பன்னிரண்டாக வகுத்தார்கள். அப்படி வாழும் நாட்களில் ஆண்டவனைத் தொழுது பாட, சைவ சமயத்தவர்கள் திருமுறைகளை பன்னிரண்டாக வகுத்து வைத்தார்கள். அதில் திருஞானசம்பந்தர் பாடிய தேவாரங்களை ஒன்று, இரண்டு, மூன்று, திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பாடிய தேவாரங்களை நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளாகவும், சுந்தரர் பாடிய தேவாரங்களை ஏழாம் திருமுறையாகவும், மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும் திருக்கோவையையும் எட்டாந்திருமுறையாகவும், கருவூர்த்தேவர் முதல் மற்றும் எட்டுப் பெரியோர்கள் சேர்ந்து பாடிய திருவிசைப்பா திருப்பல்லாண்டை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் பாடிய திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், சேரமான் பெருமாள் நாயனர் உள்பட பன்னிரண்டு பெரியோர்கள் பாடியுள்ள பாடல்களை பதினேருந்திருமுறையாகவும், சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணத்தை பன்னிரண்டாம் திருமுறையாகவும் சான்றோர்கள் வகுத்திருக்

கிறார்கள். இந்தப் பன்னிரு திருமுறைகளிலும் திருமுறைக்கு ஒரு பாடல் எடுத்து உரை எழுதியதில் பிழைகள் இருக்கலாம். மன்னிப்பது பெரியோர் கடமை.

சேரமான் பெருமாள் நாயனார் பாடுகின்றார். இறைவா உன்னைப்பாட வேண்டுமென்று ஆவல் பெருகுகிறது. ஆனால் பாடும் அளவுக்கு அறிவு ஆற்றல் எனக்கு இல்லை. இருப்பினும் ஆர்வத்தின் காரணமாகப் பாடிவிட்டேன். கடலில் தோன்றிய விஷத்தையே அருந்தி விட்டாய்; புன் சொல்லாயினும் என் சொல்லையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவையடக்கத் தோடு பாடுகின்றார்.

"………கடல் நஞ்சு அயின்றாய்
………புன் சொல்
ஆயினும் கொண்டருளே."

என்று இறைவன் அருள் பெற்ற சான்றோரே அவ்வாறு கூறும் போது, சிறியேன் சொல்ல வார்த்தைகள் ஏதும் சிக்கவில்லை. இருப்பினும் என் இச்சிறு பணிக்கு எல்லோரும் ஆதரவு தந்து ஊக்குவிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இறைவனைப் பிரார்த்தனை செய்துகொண்டு என் சிற்றுரையை முடிப்ப தோடு என் இச்சிறு பணிக்கு ஆசி கூறி நல்லுரைகள் வழங்கிய என் மதிப்பிற்குரிய ஆசான் அவ்வை டி. கே. ஷண்முகம் அவர் கட்கும், என் அன்புக்குரிய தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கட்கும் என் தாழ்ந்த நன்றியைத் தெரிவிப் தோடு, இந்தப் பணியை ஏற்று நான் எழுதியவைகளைத் தன் பத்திரிகையில் வெளியிட்டு எனக்கு ஊக்கமூட்டிய அன்புச் சோதரர் "கங்கை" ஆசிரியர் பகீரதன் அவர்களுக்கும், இந்தத் திருமுறை யாத்திரையைப் புத்தக வடிவில் கொண்டு வந்து என் பணிக்கு மேலும் ஆர்வத்தைத் தந்த அருமை நண்பர் பழ. சிதம்பரன் அவர்கட்கும், அவர்தம் பாரதி பதிப்பகத்திற் கும், மற்றும் படிக்கும் அன்பர்களுக்கும் என் நன்றியைப் பணி வன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்

சென்னை
9—2—1962.

ஏ. பி. நாகராஜன்.

2/1

முன்னுரை

மனிதனிடத்தில் இயல்பாகக் குடிகொண்டிருக்கும் தீய குணங்களெல்லாம் விலகி, அன்பும் பண்பும் நிலவ வேண்டுமானால், திருக்கோயில்களும் வழிபாடும் இன்றியமையாதவை.

விஞ்ஞான அற்புதங்கள் உலகைப் பிரமிக்க வைக்கின்றன. சந்திர மண்டலத்தைத் தாண்டி அதற்கப்பாலும் சென்று உலகத்தைச் சுற்றி வரக்கூடிய அளவுக்கு விஞ்ஞானம் வெற்றி பெற்று வருகிறது. அணுவைப் பிளந்து அதனுள்ளேயுள்ள பரமாணு சக்திகளை வெளிப்படுத்தி அதியற்புதத் திருவிளையாடல்கள் புரிகிறது விஞ்ஞானம். இந்த வளர்ச்சியினை நாம் நாள்தோறும் அறிந்து வருகிறோம்.

ஆம்; இத்தனை அற்புதங்களையும் பார்த்து, இந்த அதிசயங்களை யெல்லாம் கேட்டு அறிந்த பிறகுதான், ஆலயமும் வழிபாடும் அதற்காக நம் முன்னோர்கள் வைத்துச் சென்ற இலக்கியப் பெருஞ் செல்வங்களும், மக்கள் சமுதாயம் உய்வதற்கு எவ்வளவு இன்றியமையாதவை என்பதை நம்மால் நன்கு உணர முடிகிறது. விஞ்ஞான அதிசயங்கள் வெளிப்பட வெளிப்பட கடவுட் சக்தியிலே நமக்குள்ள நம்பிக்கையும் பக்தியும் அதிகரித்துக்கொண்டே போகின்றன. கடவுட் கொள்கையுடைய தமிழ் இலக்கியங்களை, அழிக்கவேண்டும், எரிக்கவேண்டும் என்றெல்லாம் அறிஞர்கள் சிலர் சொல்லச் சொல்ல, தமிழ் சமய இலக்கிய நூல்களின் விற்பனையும் அதிகரித்துக்கொண்டே போகின்றது. தேவார, திருவாசக, திவ்வியப் பிரபந்த வெளியீடுகளும் புதிய புதிய முறைகளில் வந்து கொண்டே யிருக்கின்றன.

மேற்கூறிய வரிசையிலே ஒன்றுதான் கலைஞர் திரு. ஏ. பி. நாகராஜன் எழுதியுள்ள திருமுறை யாத்திரை.

இந் நூலுக்குத் 'திருமுறை யாத்திரை' எனப் பெயரிட்டது மிகப் பொருத்தம். பன்னிரு திருமுறைகளிலிருந்து பன்னிரண்டு பாடல்களைத் தேர்ந்தெடுத்து நம்மை வழிப்படுத்தி யாத்திரையாக அழைத்துச் செல்லுகிறார் கலைஞர்.

நாடகக் கலைஞரல்லவா? அந்த அனுபவ மெருகு விளக்கவுரை களிலே பளிச்சிட்டு மின்னுகின்றது. பல உதாரணங்களை நாம் நாடகக் காட்சிகளாகவே காண முடிகிறது. நாம் எடுத்துக் கொண்ட பாடல்களுக்குக் கலைஞர் பொழிப்புரையோ, கருத் துரையோ தரவில்லை. அத்தனைக்கும் மேலாக தெளிவான— விரிவான விளக்கவுரை தருகிறார்.

'தேச விளக்கு', 'அம்மையே அப்பா' என்னும் இரு தலைப்புக்களிலும் கலைஞர் நாகராஜன் எழுதியுள்ள அப்பர் பெருமானின் பாடலையும், மாணிக்க வாசகப் பெருமானின் பாடலையும் பன்முறை படித்துப் படித்துச் சுவைத்தேன். கலைஞர் இப்பாடல்களிலே எவ்வளவு ஆழ்ந்து தோய்ந்து எழுதியிருக்கிறார் என்பதை எண்ணி யெண்ணி வியந்தேன்.

ஒரு நாடக—திரைப்படக் கலைஞர் இச்சீரிய பணியினைச் செய்தமைக்காக நாடகக் கலைஞன் என்ற முறையிலே நான் மிகமிகப் பெருமைப்படுகிறேன். அதிலும், எங்கள் குழுவிலே— என்னிடத்திலே நாடகக்கலை பயின்ற கலைஞர் நாகராஜன், இவ்வாறு சமய இலக்கியத் துறையிலே புகுந்து திருமுறைப் பாடல்களை நுணுகி ஆராயத்தக்க அளவுக்குத் தம் தமிழறி வினை வளர்த்துக் கொண்டிருக்கிறார் என்பது எனக்கு மட் டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

திருமுறைப் பாடல்களிலே மாணவர்களுக்குச் சுவை யூட்டுவதற்கு இந்நூல் மிகவும் தூண்டுகோலாக இருக்கு மென்பது என் உறுதியான கருத்து. நூல் நிலையங்களில் இந்நூல் தவறாது இடம்பெற வேண்டும். தமிழ் இளைஞர் ஒவ்வொருவரும் இத் திருமுறை யாத்திரையைப் படித்து— ஓதிப் பயன்பெற வேண்டும்.

கலைஞர் நாகராஜனின் இம் மகத்தான பணி, தொடர்ந்து நடைபெற வேண்டுமென வாழ்த்துகிறேன். அதற்கேற்ற வலிமையும் வாழ்வும் வளமும் இவருக்கு ஏற்பட எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவானாக.

கககஙு—மாசி-ச
சென்னை—6

தி. க. ஷண்முகம்.

சிறப்புரை

"திருமுறை" என்றால், சைவ சமய தோத்திரப்பாக்களின் தொகுப்பானே பன்னிரு திருமுறை நூல்களையே குறிக்கும். இந்த நூல்கள் தோன்றியிராவிடில், புறச்சமயத் தாக்குதல்களால், தமிழினத்தின் தனிப் பண்பாடுகள் எப்போதோ அழிந்து போயிருக்கும். அந்தக் கேட்டினைத் தவிர்த்து, நாத்தீக நெறியினின்றும் தமிழகத்தைக் காத்த பெருமை திருமுறை பாடிய சைவப் பெருமக்களுக்கே உண்டு.

இடைக்காலத்தில், தமிழ் மக்கள் ஆங்கில மொழிக்கு அடிமைப்பட்டு, அயலவர் நாகரிகத்தை ஏற்றதின் விளைவாக, திருமுறை நூல்களின் மதிப்பு மங்கியது. அதனால், நாத்திகம் பேசுவோர் நாட்டின் நாயகர்களாயினர். இந்த இழிநிலை அகல, பண்டைப் பன்னிரு திருமுறைப் பாடல்கள் தமிழ் மக்களால் பொருளறிந்து பாடப் பெறல்வேண்டும். வாய் படைத்தவரெல்லாம் மேடையேறிப் பேச வாய்ப்பு பெறக் காண்கிறோம். அதுபோல, நாவினைப் படைத்தவரெல்லாம் பன்னிரு திருமுறைகளைப் பாடி இன்புற விரும்புகிறவர்களாயின், பாடுவோரேயன்றி, பாடக்கேட்டோரும் மனத் தூய்மை பெறுவர். அதனால், நாட்டில் ஒழுக்கம் சிறக்கும். பக்திப் பாடலுக்கும், வேறுவகைப் பாடலுக்கும் பயனில் வேற்றுமையுண்டு. பால் சோறு தின்பது போல, பக்திப் பாடல்களைப் பாடுவது. வேறு வகைப் பாடல்களைப் பாடுவது, வெறுஞ் சோறு தின்பது போல.

பக்தி மதத்தைப் பரப்பும் அரும் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, திருமுறை யாத்திரை என்ற சிறந்த நூலை நமக்கு வழங்கியுள்ளார் கலைஞர் ஏ. பி. நாகராஜன்.

நண்பர் நாகராஜன், திரைப்படக் கதை—வசன எழுத்தாளர்களிலே தலைசிறந்தவர் என்பதனைத் தமிழகம் அறியும். ஆனால், தமிழ் இலங்கியங்களிலே அவருக்குள்ள பற்றுதலை,

அவர் பெற்று வரும் புலமையை அவரோடு நெருங்கிப் பழகிய வர்கள் மட்டுமே அறிவார்கள். இனி, இந்த நூலின் வாயி லாக நாட்டிலுள்ளோர் அனைவருமே அறிந்து கொள்ள முடியும்.

ஒரு திருமுறைக்கு ஒரு பாடலாக, பன்னிரு திருமுறை களிலிருந்தும் பன்னிரண்டு பாடல்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் புதைந்துள்ள பொருளை, மறைந்திருக்கும் புல மையைப் படிப்போர்க்கு இன்பம் தரும் வகையில் பக்தியோடு விமர்சனம் செய்துள்ளார் கலைஞர் நாகராஜன். திருமுறைப் பாடல்களின் சிறப்பினை விளக்கும் இந்நூலில், சங்ககால பிற்கால இலக்கியங்களிலுள்ள பொருட் செறிந்த கவிதை களில் சிலவற்றையும் ஆங்காங்கே மேற்கோள்களாக எடுத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

ஸ்தல யாத்திரை என்ருற் போல, "திருமுறை யாத் திரை" என்ற அருமையான பெயரை இந்நூலுக்குச் சூட்டி இருப்பது ஆசிரியரின் பக்தி உணர்வையே காட்டுகின்றது.

தமிழ் மக்கள் இந்நூலை வாங்கிப் படித்துப் பயன் அடைவ தோடு, மேலும் பல நூல்களை இயற்றித் தருவதற்கும் ஆசிரி யருக்கு உற்சாகம் அளிப்பார்களாக.

சென்னை,
14-3-62.

ம. பொ. சிவஞானம்.

உள்ளுறை

திருமுறை யாத்திரை

1. "இசை பாடுவர்"

பாடப் பாட இராகம், பழகப் பழக வித்தை என்பது பெரியோர் வாக்கு. பாட்டுக் கச்சேரி செய்பவர்கள் எல்லோரும் முறையோடு இசை பயின்று, இனிமையாகக் கேட்போர் உள்ளம் உருகும்படி இன்னிசை பாடுவார்கள். ஆயிரக்கணக்கான தலைகளை அசைய வைப்பது இசை. பக்தியினால் அசைக்க முடியாத கைலாய மலையை இராவணேஸ்வரன் பாட்டினால் அசைத்து பரமனிடம் வேண்டிய வரங்களைப் பெறுவதற்குக் காரணமாயிருந்ததும் இசை. படைகள் கண்டு பயந்து நடுங்கும் பாம்பையும் அசைய வைப்பது இசை. ஒரு மனிதனால் தூக்க முடியாத பெரிய பாறைகள், கற்றூண்கள் முதலியவைகளைப் பலர் சேர்ந்து அசைத்துத் தூக்குவதற்குப் பயன்படுவதும் இசை, உலகில் அசைக்க முடியாத எப்பொருளையும் அசைய வைப்பதற்கு உபயோகப் படுவது இசை. இவற்றிற்கும் மேலாக மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை அவர்கள் வாழ்க்கையில் நடமாடுவதும் இசை. பிறந்ததும் தாலாட்டு இசை, உட்காரும் பருவம் வரும்போது 'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு!' என்ற இசை. உணவு அருந்தும் காலம் வரும்போது நிலாச் சோறு ஊட்டும் இசை. யௌவனப் பருவம் வரும்போது கும்மி கோலாட்டம் என்ற இசை. இல்லற வாழ்க்கையில் ஈடுபடப் போகும் தம்பதிகள், முதலில் சந்திக்கும் இடமான திருமணப்

பந்தலிலும் நலுங்கு என்ற இசை. இறுதியில் மனிதன் உயிரை நீத்து உலக விடுதலை அடைந்த பின்னும் ஒலிப்பது ஒப்பாரி என்னும் இசை. இன்னும் புல், பூண்டு தாவர வர்க்கங்கள் செழிப்போடு வளர்ச்சி அடைவதற்கு பயன்படுவதும் இசை என்று இன்றைய விஞ்ஞானிகள் கூறுகின்றூர்கள். இப்படி இசை இல்லையென்றூல் உலகில் அசைவே இல்லை. ஸப்தஸ்வரங்களைக்கொண்டு எத்தனையோ பெரியோர்கள் அழகான சாகித்தியங்களை இசைகளாக அமைத்துப் பாடியிருக்கிறூர்கள். இதேபோல் சைவ சமயத்தை உயர்த்திய நாயன்மார்களில் முதல்வராக விளங்கிய திருஞான சம்பந்தர், நாதங்களுக்கே தலைவனுய் விளங்கும் ஈசன், வேதங்களை ஏழு சுரங்களோடு சேர்த்து இசையாகப் பாடுவர் என்பதை அழகாகப் பாடிக் காட்டுகிறூர். இறைவன் இசை பாடுவர் என்று குறிப்பிடுகிறூர்.

கவிச் சக்ரவர்த்தி கம்பர் பெருமான், அவர் பாடிய ராமகாவியத்தின் ஆரண்ய காண்டத்தில், சீதையும் இராமனும் நடந்து வரும்போது ஒவ்வொருவர் நடைக்கும் ஒவ்வொரு உவமானங்களை நகைச் சுவையாக உரையாடிக் கொள்வதைப் போல் வர்ணிக்கிறூர். ஒரு ஆற்றின் கரை ஓரமாக அன்னம் ஒன்று ஒதுங்குவதைக் கண்ட இராமன் சீதையை அழைத்து, "அங்கே பார்த்தாயா? உன்னுடைய நடையைப் பார்த்து இனி தன்னுடைய நடைக்கு மதிப்பில்லை என்று நாணப்பட்டுத்தான் அந்த அன்னம் ஒரு ஓரமாக ஒதுங்கிவிட்டது" என்று சொல்லி திருமகன் நகைத்தான். அதற்குச் சீதையும் அழகாக பதில் சொன்னுள். அதே ஆற்றில் மற்றொரு ஓரத்தில் யானை ஒன்று நீரை உண்டு திரும்பிச் சென்று கொண்டிருந்தது. அதை நாயகனிடம் காட்டி "கண்

டீர்களா? உங்களுடைய ராஜ நடைக்கு எதிராக தன்னுடைய கம்பீரமான நடை எடுபடவில்லை யென்று வெட்கப்பட்டுத்தான் அந்த யானையும் வேறு இடத்திற்குச் சென்றுகொண்டிருக்கிறது" என்று சீதையும் சிறு புன்னகை செய்தாள்.

இப்படிக் கம்பர் இருவருக்கு ஒப்பிட்ட வர்ணிப்பை திருஞானசம்பந்தர், ஒருவருக்கே ஒப்பிட்டு பரமனின் துணைவியான பார்வதி தேவியை அழகாக வர்ணிக்கிருர். உமையவள் ஒய்யாரமாக நடந்து வரும்போது அசைந்துவரும் கம்பீரத்தையும் நடந்துவரும் அழகையும் உவமை காட்டிப் பாடுகிருர். பருவமுள்ள பெண் யானையைப் போல் அசைவும், இளமையான அன்னத்தைப்போல நடையும் உடைய மலைமகள் என்ற பராசக்தியை இறைவன் துணைவியாகக் கொண்டு மகிழ்ச்சியடைகிருர் என்று திருஞானசம்பந்தர் பாடுகின்ருர். பெண்களுக்குண்டான மடந்தை என்ற பருவத்தோடு வரும் பிடி என்ற பெண் யானையின் அசைவை உமையவளின் அசைவிற்கு உவமை காட்டினுர். மடந்தை என்ற நல்ல யௌவனப் பருவமுள்ள அன்னத்தின் நடையை அன்னையின் நடைக்கு உபமானமாகக் குறிப்பிட்டு இருக்கிருர்.

> "மாதர் மடப்பிடியும், மடஅன்னமும், அன்னதோர்
> நடை யுடை மலைமகள் துணையென மகிழ்வர்"

அழகான அசைவும், அருமையான நடையும் கொண்டவளைத் துணையாகக் கொண்டு மகிழும் ஆண்டவனைப் பெரிய ரசிகர் என்றும் குறிப்பிடுகிருர். காதுக்கினிமையாகப் பிறர் பாடப்பாட, நம்மையறியாமல் நம் கை தானுகத் தாளம் போட, தலையும் அசைகிறது; ரசிப்புத்தன்மை அதிகம் ஆக ஆக தலை ஆடவும் பலே என்றும் ஆஹா என்றும் வாயும் முணு முணுக்

கிறது. மனிதனே இப்படியென்றால் உலகைப் படைத்த இறைவனைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

பூத இனப்படைகளெல்லாம் நின்றுகொண்டு இனிமையான இசைகளைப் பாடப்பாட அதை பரமானந்தத்தோடு ரசித்துகொண்டிருக்கும் பரமன், முடிவில் தானும் ஆட ஆரம்பித்து விடுகிறார் என்று ஞானசம்பந்தர் பாடுகிறார். தன்னுடைய சகாக்களான பூதகணங்கள் பாடுவதைக் கேட்டுப் பரவசமாகி முடிவில் பரமன் ஆட ஆரம்பித்து விடுவார் என்று அழகாகக் குறிப்பிடுகிறார்.

"பூத இனப்படை நின்று இசை பாடவும், ஆடுவர்"

தன்னை சார்ந்தவர்கள் பாடும்போது தன்னை மறந்து தானும் ஆடும் அளவிற்கு ஈசன் ரசிப்புத் தன்மை உடையவர் என்று விளக்கிக் காட்டுகிறார். அதற்குப் பின் ஆண்டவனின் சடை முடியை ஆளுடைப் பிள்ளை புகழ்கிறார். அவர், படர்ந்து நீண்டு வளர்ந்த சடைமுடியிலே (புனலர்) நதியைக் கட்டி ஆளுகின்றவர் என்று வர்ணிக்கிறார். படர்ந்து இருக்கும் நீண்ட சடைமுடியில் கங்கையை வைத்திருக்கும் கருணை மூர்த்தி என்று பாடுகின்றார்.

"அவர் படர் சடை நெடு முடியதோர் புனலர்"

பெரும் நதியைத் தலையில் கட்டி ஆளும் பேராற்றல் படைத்தவர், பிறர் பாட அவர் ஆடினார். இப்போது அவரே பாட ஆரம்பித்துவிடுகிறார்.

இறைவன் இசை பாடும் அற்புதத்தை அழகாகக் குறிப்பிடுகிறார். ச, ரி, க, ம, ப, த, நி, என்ற ஏழு சுரங்களைக்கொண்டு வெறும் இசையாகப் பாடாமல் வேதத்தோடு ஏழு ஸ்வரங்களைச் சேர்த்து இசை பாடுவர் இறைவன் என்பது ஞானசம்பந்தர் வாக்கு.

" வேதமோடு ஏழ்இசை பாடுவர் "

வேதத்தை இசையாகப் பாடும் வேதநாயகன் வீற்றிருக்கும் பதியான தருமபுரத்தை ஆளுடைப் பிள்ளை ஈசன் குடிகொண்டிருக்கும் தருமபுரம் என்று வெகுவாகப் பாராட்டுகின்றார். ஆழ்ந்த கடலில் வேகமாக ஓடிவரும் வெள்ளி அலைகள் பெரிய இரைச்சலுடன் நுரை நுரையாக நுரைத்துக்கொண்டு வேகமாக வந்து கரையைத் தாக்கி மேலே விழ என்று கடலின் அலைகள் வேகத்தைப் பாடுகின்றார்.

..............ஆழ்கடல் வெண்திரை
இரை நுரை கரை பொருது விம்மி நின்று

இரைச்சலுடன் வரும் வெள்ளி அலைகளின் அழகை வர்ணித்த திருஞான சம்பந்தர், அருகில் உள்ள மரம், அதில் பூக்கும் மலர், அதைச் சுற்றி ரீங்காரம் செய்யும் வண்டினம், அழகான சோலை, அங்கு இசை பாடும் குயில்கள் என்று இறைவன் குடி கொண்ட தருமபுரம் என்னும் பதியை வர்ணிக்கிறார். கடற்கரையை அடுத்து அருகே மகரந்தப் பொடிகளைச் சிந்திக் கொண்டிருக்கும் புன்னை மலர்களிலெல்லாம் நுட்பமான சிறகுகளை உடைய வண்டுகள் ரீங்காரம் செய்யும் அழகான சோலையில் குயில்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனவாம். இப்படிப் பட்ட இடமாகிய தருமபுரம் என்னும் பதியே பரமன் குடிகொண்ட பதி என்று பாடுகின்றார்.

.......................அயலே
தாதவிழ் புன்னை தயங்கு
மலர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில்
பயில் தருமபுரம் பதியே

இசை பாடும் இறைவன் எழுந்தருளியிருக்கும் பதியில் இனிமையாகப் பாடும் குயிலும் வாழ்கிறது. வண்டினங்களும் ரீங்காரம் செய்கிறது என்று வர்ணிக்கிறார். அழகான நடையுடைய மலைமகளை மனைவியாகக் கொண்டவர், பாடும் சகாக்களைக் கொண்டவர், அவர்கள் பாடும்போது மகிழ்ந்து தானும் ஆடுபவர், அதன் பின் வேதத்தை இசையோடு பாடுபவர், அப்படிப்பட்ட ஆண்டவன் கடலும், சோலையும், குயில்களும், வண்டினங்களும், சூழ்ந்த தருமபுரம் என்னும் பதியில் குடிகொண்டவர் என்று வேதத்தை இசையில் பாடிய இறைவனைத் தன் இசையால் பாடிப் பாராட்டுகின்றார் சம்பந்தர்.

மாதர் மடப்பிடியும், மடஅன்னமும், அன்னதோர்
நடை யுடை மலைமகள் துணையென மகிழ்வர்
பூத இனப்படை நின்று இசை பாடவும், ஆடுவர்.
அவர் படர் சடை நெடு முடியதோர் புனலர்
வேதமொடு ஏழ் இசைபாடுவர் ஆழ்கடல் வெண்திரை
இரை நுரை கரை பொருது விம்மி நின்று அயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயில் தருமபுரம் பதியே.

(திருஞானசம்பந்தர்-தேவாரம்: முதல் திருமுறை)

2. "இரவும் பகலும்"

இரவும், பகலும், என்ற வார்த்தைகள் வராத பாடல்களே இல்லை. பேசத் தெரிந்தபின் இரவு பகல் என்ற வார்த்தைகளை உச்சரிக்காதவர்களும் உலகில் இல்லை. ஒவ்வொருவரும் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு இரவு பகல் என்ற வார்த்தைகளை மிக அழகாக எடுத்துக் கையாளுகிறார்கள்.

பத்தாம் திருமுறை என்று வகுக்கப்பட்ட திருமந்திரத்தில் திருமூலர் மிக அழகாகப் பாடு கின்றார். ஒடுங்கி ஒரு நிலைமைக்கு வந்துவிட்ட உத்தமர் உள்ளம் எதைக் கண்டும் நடுங்குவதுமில்லை. இரவு பகல் என்ற பேதமும் ஞானியர்க்கு இல்லை என்று திருமூலர் விளக்குகின்றார்.

ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவதில்லை......
......இராப்பகல் இல்லை

(திருமூலர்-திருமந்திரம்)

என்று கூறுகின்றார். இதிலிருந்து முற்றும் கடந்த ஞானியர்கள் இரவு பகலை எப்படிக் காண்கின்றார்கள் என்பதைத் திருமூலர் தெளிவாக விளக்கி விட்டார்.

திருவாய்மொழி அருளிய நம்மாழ்வார் பாடிய பாடல்களில், பகவானைப் பாடித் தொழும் ஒரு பக்தன் ஆண்டவனிடம் 'இறைவா உன் புகழ் பாடு வதில் சலிக்கமாட்டோம். பகலும் இரவும் பணிந்து குழைந்து உன் புகழ்தான் பாடுவோம்' என்று

மனம் உருகிப் பாடும் பாவனையில் அமைத்திருக்கின்றார்.

......அவன் புகழ் பாடி இளைப்பிலம்
பகலும் இரவும் படிந்து குடைந்தே.

(திருவாய்மொழி-நம்மாழ்வார்)

என்று பாடுகின்றார். பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான நம்மாழ்வார் பாடிய திருவாய் மொழியில் ஆண்டவனை வழிபடும் பக்தன் பகல் இரவு என்ற வார்த்தைகளை எப்படி உபயோகப் படுத்துகிறான் என்பதை நம்மாழ்வார் அழகாகப் பாடிக் காட்டி விட்டார்.

ஐம்பெரும் காப்பியங்களில் தலைக் காப்பியமாக விளங்கும் சிலப்பதிகாரத்தைத் தந்தருளிய இளங்கோ வடிகள் புறஞ்சேரியிறுத்த காதையில், வாழ்விழந்து, மானத்தை மட்டும் விடாது வாழவேண்டுமென்று நினைத்த கோவலன், கண்ணகியுடன் பிழைக்க வழி தேடிப் பாண்டி நாட்டிற்குச் செல்லும் போது, வாழ்ந்து கெட்டவர்கள் பிறர் கண்ணில் பட்டால் பழிப்பார்கள் என்று அஞ்சியோ என்னவோ பகலில் செல்லுவதைவிட எவர் கண்ணிலும் படாமல் இரவில் செல்லுவதே நல்லதென்று முடிவு கட்டி கவுந்தி அடிகளிடம் வேறு காரணத்தைக் காட்டி நாம் பகலில் செல்லாது இரவில் செல்லுவதே நல்லதென்று கோவலன் கூறுவதாக இளங்கோவடிகள் கூறுகின்றார்கள்.

பகலொளி தன்னினும் பல்லுயிர் ஓம்பும்
நிலவொளி விளக்கின் நீளிடை மருங்கின்
இரவிடைக் கழிதற் கேதமில்லெனக்

(சிலப்-புறஞ்சே-காதை. 10.)

எனக் கூறும் பாட்டிலே செல்வமிழந்தாலும் மானத்தோடு வாழ வேண்டும் என்று நினைக்கும் ஒரு

இல்லறத்தான் இரவு பகலை எவ்வாறு எண்ணுகிறான் என்பதை இளங்கோவடிகள் அழகாகக் காட்டி-விட்டார்.

பழம் பெரும் இலக்கியங்களில் ஒன்றான முத்தொள்ளாயிரத்தில் பாண்டியனைப் பற்றிக் கூறும் கைக்கிளையில் தலைவன் மேல் மோகம் கொண்டு அவனைத் தழுவ முடியாமல் தவிக்கும் தலைவி ஒரு பாடல் கூறுவதாக அமைந்துள்ளது. அது யாதெனில், தன் மனத்தால் நினைத்த தலைவனைத் தழுவக் கொடுத்து வைக்காத தலைவி நொந்து சொல்கிறாள். "இரவே நீ எனக்குத் தேவையில்லை. பகற் பொழுதே விரைவில் வந்துவிடு" என்கிறாளாம். தலைவனைத் தழுவும் வாய்ப்பினைப் பெற்ற தலைவி 'இரவே நீ நீடித்து நில். விடிந்துவிடாதே' என்கிறாளாம்.

புல்லாதார் வல்லே புலர்கென்பர்-புல்லினார்
நில்லாயிரவே நெடிதென்பர்.

(முத்தொள்ளாயிரம்-பாண்டியன்-கைக்கிளை)

முத்தொள்ளாயிரத்தில் தலைவன் பால் காதல் கொண்டு தழுவமுடியாது வேதனைப் படும் தலைவிக்குப் பகல் இரவு எப்படியுள்ளது என்பது விளங்கி விட்டது.

அமரகவி பாரதியார் கண்ணன் என் சேவகன் என்ற தலைப்பிலே எழுதிய பாடலிலே சேவகன் எசமானனிடம் பணிவோடு கூறும் பாவனையில் அமைத்திருக்கிறார்.

இரவிற் பகலிலே எந்நேர மானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை தேவரீர்
தம்முடனே சுற்றுவேன்.

(பாரதி கவிதைகள்)

என்று ஊழியன் கூறுகின்ருன். எசமானுக்குப் பணிபுரியும் சேவகன் இரவு பகல் என்ற வார்த்தை எவ்வளவு தேவைப்பட்ட இடத்தில் கூறுகின்ருன் என்பதை அமரகவி எடுத்து காட்டி விட்டார். ஆக, முற்றும் கடந்த ஞானியார் கண்ட இரவு பகலைச் சொன்ன—திருமூலர், ஆண்டவனைப் பாடும் அடியான் கண்ட இரவு பகலைச் சொன்ன—நம்மாழ்வார், மானத்தோடு வாழ நினைத்த இல்லறத்தான் கண்ட இரவு பகலைச் சொன்ன—இளங்கோ வடிகள், தலைவனைத் தழுவமுடியாது தவிக்கும் தலைவி கண்ட இரவு பகலைச் சொன்ன—முத்தொள்ளாயிரம், எசமானுக்கு உண்மையாக ஊழியம் செய்யும் சேவகன் கண்ட இரவு பகலைச் சொன்ன—அமரகவி முதலியோர்களும் மற்றும் பல மேதைகளும் அழகாக இரவு பகலும் என்ற வார்த்தையை இடத்திற்கேற்ப மிகப் பொருத்தமாக அமைத்துப் பாடி விட்டார்கள்.

அதேபோல் சைவ சமயக்குரவர்கள் நால்வரில் முதல்வராய் விளங்கிய திருஞானசம்பந்தரும் தாம் பாடிய இரண்டாம் திருமுறையில் இரவும் பகலும் என்ற வார்த்தையைக் கையாளுகிருர். அதன் சிறப்பைக் காண்போம்.

ஈசன்மேல் ஆசைகொண்ட பெண்ணொருத்தி இறைவனை நினைத்து வேதனைப்படுகிருள். பெண்ணைப் பெற்ற தாய் தன் மகள் நிலையைக் கண்டு மனம் வருந்தி கூறும் பாவனையில் ஆளுடைப்பிள்ளை அமைத்திருக்கிருர்.

“பெருமானே! உன்பால் வைத்திருக்கும் அன்பின்றும் என் மகள் மாறமாட்டாள். இறைவனே, இவள் உன் மேல் வைத்த அன்பை மாற்றிக் கொள்ளமாட்டாள். பெருமானே வழுவமாட்டாள்”

என்று பெண்ணைப் பெற்ற அன்னை கூறும் பாவனையில் பாடுகிறார்.

"வழுவாள் பெருமான்!"

உன் பால் வைத்த அன்பிலிருந்து என் மகள் வழுவமாட்டாள் பெருமானே என்றாள். அதன் பிறகு உறக்கம் நீங்கி எழுந்திருக்கும் போதே என் மகளுக்கு வேறு எந்த நினைப்பும் இல்லை. எவ்விதப் பேச்சுமில்லை. எழுந்திருக்கும் போதே ஈசா உன் திருவடி வாழ்க என்று கூறிக் கொண்டுதான் நித்திரையிலிருந்து என் செல்வி எழுவாள்' என்று சொல்கிறாள்.

"கழல் வாழ்க வென எழுவாள்"

நித்திரை நீங்கிக் கண் விழிக்கும் போதே நின் திருவடி வாழ்கவென்று வாழ்த்திய பின்புதான் பஞ்சணையை விட்டு எழுவாள் என்கிறாள். பின் தன் மகள் இரவும் பகலும் உன்னையே தான், நினைத்து ஏங்கிக் கொண்டிருப்பாள்' என்று கூறுகின்றாள்.

"நினைவாள் இரவும் பகலும்"

தன் மகள் படும் வேதனையைப் பார்த்துத் தாய் மனம் புண்பட்டு இரவும் பகலும் ஈசா உன் நினைவே என்று பாடுகின்றாள். தன் பெண்ணைக் கண்டு இரங்கும் அன்னை கூறும் இரவு பகலை ஆளுடைப் பிள்ளை அழகாக எடுத்துக் காட்டிவிட்டார். அதன் பின் மழுவாயுதம் தாங்கிய படையை உடையவனே என்று வீரத்தைக் குறிப்பிட்டுப் பின் தன் மகள் நேசித்து விட்டதால் பெருமானை மருமகனே என்று வாய் நிறையச் சொல்லுகிறாள், 'மழுவாயுதப் படையுடையவனே, என் மருகப் பெருமானே' என்று

மாமியார் முறை கொண்டாடுகிருள் பெண்ணைப் பெற்ற அன்னை.

" மழுவாள் உடையாய் மருமகற் பெருமான் "

உரிமையோடு ஈசனை மருமகனே என்று அழைத்து தன் மகளைப் பற்றிக் கூறுகின்ருர். 'மருமகனே என் மகள் நின்னை நினைப்பதும் மட்டும் அல்ல; தொழு வதும் உன்னையே தான். இப்படிப்பட்ட என் மகளை ஆதரிக்காமல் துயர்படும்படி ஆக்கிவிட்டாயே' என்று மனம் நொந்து புலம்புகின்ருள்.

" தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே "

என்று மகளைக் கண்டு தாயிரங்கும் பாவனையில் திருஞானசம்பந்தர் அழகாகப் பாடிக் காட்டினுர். "அன்பில் தவருதவள். உன்னடி வாழ்த்தி எழுப வள்; இரவும் பகலும் உன்னையே நினைப்பவள்; நின்னையே தொழுபவள்; இவளை இப்படி துயர்பட வைக்கலாமா, மருமகனே " என்று உரிமையோடு ஈசனை மருமகன் ஆக்கி மாமி பாவனையில் பாடுகின்ருர்.

வழுவாள் பெருமான் கழல் வாழ்க வெனு
எழுவாள் நினைவாள் இரவும் ; பகலும்
மழுவாள் உடையாய் மருமகற் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே !

(திருஞானசம்பந்தர்-தேவாரம் : இரண்டாம் திருமுறை)

3. "தாயினும் நல்ல தலைவர்"

"தாய் சொல் துறந்தால் வாசகமில்லை" என்ற வாக்கியத்தைக் கேட்டதும், தயரதச் சக்கரவர்த்தியின் திருக்குமாரன் ஸ்ரீ ராமனின் பெயர் தான் எவருக்குமே ஞாபகத்திற்கு வரும். தாய் சொல்லுக்காகத் தான் ஆளவேண்டிய தரணியைத் தம்பிக்குக் கொடுத்து விட்டு தவவேடம் பூண்டு காட்டிற்குச் சென்ற தயாள குணம் படைத்தவன். பெற்ற தாய்க்குமேல் பிரிதொரு தெய்வமும் இல்லை என்ற எண்ணம் கொண்டவன். தம்பிமார்களோடு தமையன் வாழ்வது எப்படி? என்று தரணியில் வாழும் சகோதரர்களுக்கு வாழ்ந்து காட்டியவன். தாரம் ஒன்றே ஒன்றுதான் மனிதனுக்குத் தேவை யென்ற சட்டத்தை அவன் வாழ்ந்த காலத்திலேயே அமுலுக்குக் கொண்டு வந்தவன். விவேகத்திற்கு முதல்வன். வேதங்களுக்கெல்லாம் தலைவன். அப்படிப்பட்ட இராமன் பட்டத்தைத் துறந்து தாரத்தோடும், தம்பி இலக்குவனோடும் காட்டிற்குச் சென்று கங்கைக் கரையிலிருக்கும் முனிவர்களோடு அவர்கள் ஆஸ்ரமத்திற்குள்ளே உரையாடிக் கொண்டிருக்கிறான். ஆஸ்ரமத்திற்கு வெளியே தம்பி இலக்குவன் தமையனுக்காகக் காவல் புரிந்து கொண்டிருக்கிறான்.

அந்தக் கங்கையில் ஓடும் பல படகுகளுக்குத் தலைவனான குகன் இராமனைக் காண வேண்டுமென்று ஆசையோடு வந்து ஆஸ்ரமத்திற்கு வெளியே காவலுக்கு நின்ற இலக்குவனிடம் பணிவோடு உத்தரவு

கேட்டான். பணிவிலே படபடப்பும் இருந்தது. காரணம் இராமனின் திருமுகத்தைக் காண வேண்டு மென்று அத்தனை ஆவல். குகனைக் கண்ட இலக்கு வன் உள்ளே சென்று உத்தரவு பெற்று வருவதாகச் சொல்லிச் சென்றான்.

முனிவர்களோடு அண்ணன் இராமன் உரை யாடிக் கொண்டிருக்கும் வேளையில் தம்பி உள்ளே வந்தான்.

பெரியவர்களோடு பேசிக் கொண்டிருக்கும் போது குறுக்கே பேசக் கூடாது என்ற தத்து வத்தை அறிந்த தம்பி தயங்கிப் பேசாமல் நின்று விட்டான். காரணமின்றி காவலை விட்டு வரமாட் டான் இளையவன் என்பதையறிந்த முதல்வன், "என்ன இலக்குவனா? எங்கே வந்தாய்?" என்றான். "வெளியே குகன் என்பவன் தங்கள் திருமுகத்தைக் காணத் துடிக்கிறான்" என்றான். விவரம் கேட்ட இராமன் வேதம் பயின்ற முனிவர்களோடு உரை யாடிக் கொண்டிருக்கும்போது எழுந்து போகலாமா?

அது மரியாதைக் குறைவு என்பதை உணர்ந்த இராமன், உடன் எழுந்து போகாமல் தயங்கினான். தமையன் தயங்குவதன் காரணத்தைத் தம்பி புரிந்து கொண்டான். இராமன் வெளியே போகாவிட்டால் அன்பினால் மிகுந்த ஆர்வத்தால் குகன் உள்ளேயே வந்தாலும் வந்து விடுவான் என்ற விவரம் இலக்குவ னுக்கு மட்டும் தானே தெரியும்? ஆகையால் இராமன் முனிவர்களை விட்டு வெளியே வருவதற்கு எந்த மந்திரத்தைச் சொல்லலாம் என்று யோசித்தான். தாயைவிடத் தரணியில் சிறந்தவர் எவருமேயில்லை என்ற கொள்கையுடையவன் தமையன். ஆகையால்

"தாயைவிடச் சிறந்த குணம் படைத்த குகன் தங்களைக் காண வெளியே நிற்கிறான்" என்று சொல்ல நினைத்து, "வந்திருக்கும் குகன் என்ற தூயவன் தாயினும் நல்லான்" என்று தமையனிடம் சொன்னான். மறு வார்த்தை பேசாமல் முனிவர்களிடம் உத்தரவு பெற்று இராமன் தாயினும் நல்ல குகனைக் காண வெளியே சென்றான்.

இப்படி இலக்குவன் வாயிலாகக் கவிச் சக்கரவர்த்தி கம்பர் தன் கவிதையில் குகனைத் 'தாயினும் நல்லான்' என்று வர்ணிக்கிறார். அதே போல் சைவத் திருமுறைகளில் முதல் திருமுறையைப் பாடியவரும் உமையவளின் அமுதப்பால் அருந்தியவருமான திருஞானசம்பந்தர் தான் பாடிய தேவாரத்தில் ஈசனைத் தாயினும் நல்ல தலைவர் என்று பாடுகின்றார்.

நாட்டின் நலனுக்காக பாடுபட நல்ல தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆயிரக்கணக்கான தொண்டர்களும் இருக்கிறார்கள். அவரவர் தலைவரைப் பற்றிப் பேசும்போது "நாட்டிலே நல்ல தலைவர் எங்கள் தலைவர்தான். பண்புகளுக்கெல்லாம் இருப்பிடம்; அன்புக்குப் பிறப்பிடம்" என்றெல்லாம் புகழ்ந்து பாராட்டுவார்கள். அதேபோல் உலகுக்கெல்லாம் ஒரு தலைவனாய் இருக்கும் ஈசனை திருஞானசம்பந்தர் புகழ்ந்து பாடுகின்றார். எப்படி? பண்புள்ள தலைவர், அன்புள்ள தலைவர் என்றெல்லாம் பாடாமல் பெற்ற தாயைவிட நல்ல தலைவர், நம்மைக் காக்கும் கடவுள் என்கிறார். தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என்று தாயைப் பாராட்டுகிறோம். ஆனால் சம்பந்தர் அந்தத் தாயினும் நல்ல தலைவர் என்று ஈசனைப் பாடுகிறார். அப்படிப்பட்ட

தாயினும் நல்ல தலைவரை அவர் தொண்டர்களாகப் பணியாற்றுகின்ற அடியார்கள் பாராட்டிப் புகழ்ந்து பாடுகின்றார்கள் என்று திருஞானசம்பந்தர், ஈசனிடமே சொல்லுகின்றார். தாயினும் நல்ல தலைவரென்று அடியார்களெல்லாம் தங்களுடைய திருவடிகளைப் போற்றிப் பாடுவார்கள் என்று வர்ணிக்கிறார்.

> தாயினும் நல்ல தலைவரென்று அடியார்
> தம் அடி போற்றி இசைப்பார்கள்

பெற்றவளைவிடப் பெரிய தலைவர் என்று பரமனை திருஞானசம்பந்தர் பாடிவிட்டார். "பால் நினைந்து வூட்டும் தாயினும் சாலப் பரிந்து" இந்தப் பாவியைக் கவனிக்கிறாய் என்று மாணிக்கவாசகரும் திருவாசகத்தில் பிடித்த பத்தில் பாடியிருக்கிறார். அப்படிப்பட்ட தலைவரே உங்கள் அடியார்கள் தங்களின் திருவடிகளை வணங்கி சதா பாராட்டுகிறார்கள் என்று கூறுகின்றார். அடியார்கள் அவ்வாறு போற்றிப் பாடுவதற்கு என்ன காரணம்? தொண்டர்கள் பேசும்போது அந்தப் பேச்சில் பிழையில்லாமல் சொல்லில் ஈசன் துணையிருக்கிறார். சிந்திக்கும் எண்ணத்தில் தீயவை கலக்கக் கூடாதென்று மனத்திலும் இறைவன் குடியிருக்கிறார். சொல்லிலும் நெஞ்சிலும் இரண்டிலும் கூடி நின்று தொண்டர்களை விட்டு நீங்காத தன்மை படைத்தவர் இறைவன் என்று பாடுகின்றார்.

> வாயினும் மனத்தும் மருவிநின்று அகலா
> மாண்பினர்...

தொண்டர்கள் பேச்சிலும் மனத்திலும் இரண்டிலும் கூடி நின்று அடியார்களை விட்டு அகலாத மாண்புள்ளவர். ஒவ்வொரு சமயத்திலும் அடியார்கள்

காணும்போது ஒவ்வொரு வேடமாகக் காட்சி தந்தவர். பல வேடங்கள் தரித்து பற்பல விதமாகக் காட்சியளித்தவர். காண்பவர் கண்களுக்கு பல வேடங்களாக வந்து காட்சி தந்தவர்.

"காண்பல வேடர்"

கூத்தாடும் ஆண்டவர் போட்ட வேடங்களுக்குக் கணக்கேது. காண்பவர்களுக்கு பல வேடங்களைப் புனைந்து அருளிய கையிலைநாதர். வாழ வசதியுள்ள செல்வந்தர்கள் வீட்டில் நோயும் துன்பமும் வந்தால் பணத்தை வைத்தியர்களுக்கு அள்ளி வீசிக் குணப்படுத்திக் கொள்கிறார்கள். பசியும் பட்டினியுமாக அலையும் தொழிலாளி குடும்பத்தில் நோயும் பிணியும் சூழும்போது வைத்தியனுக்குக் கொடுக்க எங்கே போவார்கள்? பின் அவர்கள் எப்படிக் குணமடைகிறார்கள்? இறைவன் என்ற வைத்தியன் ஏழைத் தொழிலாளி குடும்பத்தில் நோய், பிணி வராமல் நீக்கி விடுகிறான். மாளிகை வாசிக்கு மருத்துவமிருக்கிறது. மரத்தடியில் வாழும் தொழிலாளிக்கு மகேஸ்வரனின் அருள் மருத்துவம் துணை செய்கிறது. நோயிலும் பிணி என்ற துன்பத்தையும் அடியார்கள் என்ற தொழிலாளிகள் பால் இறைவன் நீக்கி விடுகிறான் என்று பாடுகின்றார்.

"நோயிலும் பிணியும் தொழிலர் பால் நீக்கி"

வியாதியும் வேதனையும் தொண்டர்கள் என்ற தொழிலாளர்களுக்கு வராமல் நீக்கி விடுகின்றான். இப்படியெல்லாம் அருள் புரியும் இறைவன் எப்படிப் பட்டவன்? வேதத்தின் தத்துவத்தை உலகுக்கு எடுத்து ஒதியவன், வேதத்தில் நுழைந்து அதன் தத்துவத்தை ஆராய்ந்து உபதேசித்தவன். நூல்

என்ற வேதத்திலே நுழைந்து அதன் கரையைக் கண்டவன்.

"நுழை தரு நூலினர்"

வேதம் என்ற நூலில் நுழைந்தவர் வீற்றிருக்கும் மலையை ஞானசம்பந்தர் புகழ்கிறார். உலகத்தில் கோயிலும் சுனையும் கடலோடு சூழ்ந்துள்ள இடம் கோணமாமலை. அந்த மலையில் அமர்ந்திருக்கிறார் என்று பாடுகின்றார். உலகில் கோவிலும் அதை யொட்டி சுனையும் அவைகளைச் சூழ்ந்த கடலும் இருக்கிற இடம் கோணமாமலையே. அந்த மலையில் வீற்றிருக்கிறார் தாயினும் நல்ல தலைவர் என்று பரமனை ஞானசம்பந்தர் பாடுகின்றார்.

..................ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே!

என்று படிப்பவர் பாடுபவர் கேட்பவர் அனைவர் உள்ளமும் உருகும்படி, தாயினும் நல்ல தலைவர் வாயினும் மனத்திலும் நம்முள் இருப்பவர், நோயிலும் பிணியும் அடியவர்பால் நீக்குபவர், வேதத்தை ஆராய்ந்தவர் கோணமாமலையில் அமர்ந்திருக்கிறாரே என்று அழகாக ஞானசம்பந்தர் பாடுகின்றார்.

தாயினும் நல்ல தலைவரென்று அடியார்
தம் அடி போற்றி இசைப்பார்கள்!
வாயினும் மனத்தும் மருவிநின்று அகலா
மாண்பினர் காண் பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால் நீக்கி
நுழை தரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே!

(திருஞானசம்பந்தர் தேவாரம்: மூன்றும் திருமுறை)

4. சினம் எனும் சரக்கு

கொண்டு செல்லக் கூடாத கள்ளச் சரக்கை, காசுக்கு ஆசைபட்டுக் கடல் வழியே தோணியில் எடுத்துச் சென்று குறிப்பிட்ட இடத்தை அடைய எண்ணுகிறார்கள். ஆனால், இடைவழியில் ஏதாவது தவிர்க்க முடியாதபேராபத்துவந்து விடுகிறது. அந்தச் சமயத்தில்தான் "ஆண்டவனே" என்று, கடவுளைத் தியானிப்பார்கள். ஆபத்து வரும் வேளையில்தான் ஆண்டவனை வேண்டுவார்கள்.

இப்படி அப்பர் சுவாமிகளும், தன் கற்பனையில் ஒரு படகைத் தயார் செய்து எடுத்துச் செல்லக் கூடாத சரக்கை ஏற்றிக் கொண்டு கடல் வழியே செல்கிறார். அப்படிச் செல்லும்போது, தமக்கு ஏற்பட்ட ஆபத்தைத் திருவொற்றியூர் இறைவனிடம் சொல்லி முறையிடுகிறார்.

அப்பர் சுவாமிகள் தம் சரக்கை ஏற்றிச் செல்ல முதலில் தோணி வேண்டுமென்று முடிவு கட்டிக் கற்பனையில் உருவாக்குகிறார். மனத்தையே தோணியாக்க முடிவுகட்டி விடுகிறார். கடல் வழியே செல்ல, நாவுக்கரசர் தன் மனதையே கற்பனையில் தோணியாக நிர்ணயித்தார்.

"மனம் எனும் தோணி பற்றி,"

சரக்கை ஏற்றிச் செல்ல தோணி மட்டும் எடுத்துக் கொண்டால் போதுமா? துடுப்பு வேண்டாமா? துடுப்பு இல்லாமல் தோணி எப்படிச் செல்லும்?

ஆனல் அப்பர் சுவாமிகள் எடுத்துக் கொண்ட தோணி, மரத்தினல் செய்த தோணியல்ல! மனம் என்ற தோணி. அந்த மனம் என்ற தோணிக்கு மரத்தினல் செய்த துடுப்பு உபயோகப்படுமா? உபயோகப்படாது. ஆகவே, தன் கற்பனையில் தயாரித்த தோணிக்குப் பொருத்தமான துடுப்பை உண்டாக்குகிருர். மனம் என்ற தோணிக்கு, அறிவு என்ற கோலை எடுத்துத் துடுப்பாகப் போட்டார்.

"மதி எனும் கோலை ஊன்றி,"

இப்போது தம் கற்பனையில் உருவான மனம் என்ற தோணிக்கு, மதி என்ற கோலைத் துடுப்பாகப் போட்டுவிட்டார். ஏற்றிச் செல்லவேண்டிய சரக்கைப் பற்றி யோசிக்கிருர். நாவுக்கரசர் கள்ளச் சரக்கு எடுத்துச் செல்வாரா?

பின் அவர் எடுத்துச் சென்ற சரக்கு என்ன? கோபம் என்ற சரக்கைத்தான் மனம் என்ற படகில் தூக்கிப் போட்டுக் கொண்டார். மனிதத் தன்மைக்கு ஆகாத சினத்தை யெல்லாம் சரக்காக்கித் தோணியில் போட்டுக் கொண்டார்.

"சினம் எனும் சரக்கை ஏற்றி,"

மதி என்ற கோலினல் ஓட்டும் மனம் என்ற தோணியிலே, சினம் என்ற சரக்கை நிறையக் கொட்டிக் கொண்டார். இப்படியாகத் தன் கற்பனையிலே செல்லும் படகை, அலைகள் திரண்டு வரும் ஆழ் கடலில் வேகமாக ஓட்டுகிருர். மெதுவாகப் போகவில்லை. ஏனென்ருல், கூடாத பொருளைக் கொண்டு செல்பவன் விரைவில் குறிப்பிட்ட இடத்தைச் சேர வேண்டுமென்று 'ஓடுவானே தவிர,' நடக்கமாட்டான். அதேபோல், நாவுக்கரசரும், தன்

படகை அலைகள் படர்ந்த கடலில் வேகமாக ஓட்டு கிறார்.

"செறி கடல் ஓடும்போது,"

கூடாத சரக்கை ஏற்றிக் கொண்டு செல்லு கிறார். செல்லும்போது, 'தம் படகைப் பாறை தாக்கி விட்டது' என்று சொல்கிறார். பாறை என்றால் கற்பாறையாய் இருக்குமா? இருக்காது. ஏனெனில், கற்பனையில் உருவானது மனம் என்ற தோணி, மதி என்ற கோல், சினம் என்ற சரக்கு. இப்படிச் செல் லும்போது, உண்மையான கற்பாறை எப்படித் தாக் கும். பின் அவர் படகைத் தாக்கியது என்ன? "ஆணவம்" என்ற பாறையில் அவருடைய கற்பனைப் படகு மோதி அழியும் நிலை வந்து விட்டதாம்.

"மதன் எனும் பாறை தாக்கி
மறியும்போது,—"

எந்த ஆபத்தும் அணுகாது என்று சரக்கை ஏற்றிச் செல்லும் போது, உயிருக்கே மோசமான ஆபத்து வந்து விட்டது. அதுவரை தன்னைக் காப் பாற்ற ஒருவன் இருக்கிறான் என்ற உணர்வில்லை. அவனை அறியவும் முடியவில்லை. ஆபத்து அணுகும் போது ஆண்டவன் நினைவு வருகிறது. ஆங்கிலேயர் கள் கண்டு பிடித்த ஆகாய விமானத்தில் கூட, பழுது ஏற்பட்டுக் கீழே விமானம் இறங்க முடியாத நிலை வரும்போதுதான் அதிலுள்ள [காப்டன்] தலைவன் ஆண்டவனைத் தியானித்துக் கொள்ளுங்கள் என்று பிரயாணிகளுக்குச் சொல்வது வழக்கமாம். அதே போல் ஒவ்வொருவரும், தவிர்க்க முடியாத ஆபத்து வரும் போதுதான், ஆண்டவனை அதிகமாக எண்ணத் தொடங்குவார்கள். 'அறிய முடியாத கடவுளே! உன்னருள் வேண்டு' மென்று வேண்டு

வார்கள். அப்பர் சுவாமிகளும், தம் கற்பனைப் படகிற்கு ஆபத்து வந்து மடியும் நிலை வரும்போது, 'அறிய முடியாத கடவுளே, உன்னருளை எனக்குக் கொடுப்பாயே' என்று திருவொற்றியூர் ஈசனிடம் முறையிடுகிறார்.

"—அறிய வொண்ணு
உனை உனும் உணர்வை நல்காய்
ஒற்றியூர் உடைய கோவே!"

'திருவொற்றியூரில் வீற்றிருக்கும் இறைவனே! எனக்கு உயிர் கொடு. நல்வழி காட்டு' என்று வேண்டுகிறார்.

மனம் எனும் தோணி பற்றி
மதி எனும் கோலை ஊன்றி
சினம் எனும் சரக்கை ஏற்றி
செறி கடல் ஓடும் போது
மதன் எனும் பாறை தாக்கி
மறியும் போது அறிய வொண்ணு
உனை உனும் உணர்வை நல்காய்
ஒற்றியூர் உடைய கோவே.

[திருநாவுக்கரசர் - தேவாரம்: நான்காவது திருமுறை]

5. "புழுவிலும் கடையேன்"

தன்னைத் தாழ்த்தி சிறிய பொருளையும் உயர்த்திச் சொல்வது பண்புள்ள பெருந் தகையார் செய்கை.

ஒரு பெரிய நாடகக் குழு ஒன்றில் நடிப்புத் தொழில் கற்றுக்கொள்ளச் சேர்ந்த ஒருவன் விரைவில் அந்தப் பயிற்சிகளிலெல்லாம் தேர்ச்சி பெற்று சிறந்த நடிகனாகி அதே நாடகக் குழுவில் முக்கியமான நடிகர்களில் அவனும் ஒருவனாகும் நிலைமைக்கு வந்து விட்டான்.

இவ்வாறு இருக்கும் நிலையில் பத்து நாட்கள் விடுமுறை எடுத்துக்கொண்டு தன் சொந்த ஊருக்கு வந்தான். தன் வீட்டிலும் ஊராரும் அளவுக்கு மீறி அவனைப் புகழ்ந்தார்கள். அவனும் தன் பால்ய நண்பர்களையெல்லாம் சந்திக்க விரும்பி ஒவ்வொரு சிநேகிதர்களாக நேரில் தேடிப்போய்ப் பார்த்து வந்தான்.

அந்த நடிகனின் நண்பன் ஒருவன் சிறு வயதிலிருந்தே எந்தச் சமயத்திலும் நாய் ஒன்றைக் கையில் பிடித்துக்கொண்டே திரிவான். நாய் ஒன்று தன்னுடன் இல்லாமல் எப்போதும் இருக்கவேமாட்டான். அப்படி வழக்கம்போல் ஒரு நாயுடன் அன்றும் வந்து கொண்டிருக்கும்போது நடிக நண்பன் நாயுடன் இருக்கும் சிநேகிதனைச் சந்தித்து "எப்போதும் ஒரு நாயைக் கட்டிக்கொண்டு அழுகிறாயே?" என்று கேலி செய்தான். அதற்கு அவன் சொன்

ஞன். "இந்த நாய்க்குள்ள குணம்தான் எனக்கும் இருக்கிறது. ஆனல் இதனிடம் உள்ள நன்றி என்னிடம் இல்லை. ஆகையால் இந்த நாயைவிட என்னை நான் கேவலமாகத்தான் மதிக்கிறேன். என்னிலும் உயர்ந்ததாக இந்த நாயை எண்ணுகிறேன்" என்ருன்.

இதைக் கேட்ட நடிக நண்பன், "அது சரி நீ ஏன் இங்கிருந்து இந்த நாய்களோடு சுற்றித் திரிகிருய். பேசாமல் நான் இருக்கும் நாடகச் குழுவிற்கு வா. உன்னையும் சேர்த்துக்கொள்ளச் சொல்கிறேன். அந்தக் குழுவில் சேர்ந்துவிடு. பின் உனக்கு இந்த நாய்கள் நினைவே வராது" என்ருன்.

அதற்கு அவன் பதில் சொன்ஞன்: "நான்தான் நாயினும் கீழானவன் என்று எண்ணுகிறேனே, பிறகு நீ சொல்லும் நாடகக் குழுவுக்கு எவ்வாறு வந்து சேருவேன்?" என்று மறுத்து விட்டானும்.

இதேபோல், நாவுக்கரசரும் "புழுவைவிட கேவலமான நான் ஈசன் புகழ்பாடும் குழுவுக்கு எவ்வாறு போய்ச் சேருவேன்?" என்று உள்ள முருகப் பாடுகின்ருர்.

"குணத்திலே எனக்கும் புழுவுக்கும் பேதமில்லை. அதுவும் உலகிலே வாழ்கிறது. நானும் வாழ்கிறேன்.

"அதுவும் வயிற்றுக்கு ஆகாரம் தேடுகிறது. என் பசிக்கு நானும் பாடுபடுகிறேன். வசிக்க அந்தச் சிறு புழுவும் இடம் தேடிக் கொள்கிறது; என் உடலைப் பாதுகாக்க நானும் சிறு குடிசையில் வாழ்கின்றேன். அதுவும் மடிகிறது; மனிதனும் சாகிருன். அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்ற நான்கு குணங்கள் என்னிடத்திலும் இருக்கிறது. என்போல ஜீவிக்க

அந்தப் புழுவிடத்திலும் நான்கு குணங்கள் அமைந் திருக்கிறது. ஆகவே அதற்கும் குணம் நான்கு; எனக்கும் அதேதான்" என்று அப்பர் ஆண்டவனி டம் முறையிடுகின்றார்.

"புழுவுக்கும் குணம் நான்கு
எனக்கும் அதே."

"புழுவுக்கும், பூதலத்தில் மனிதப் பிறப்பெடுத்த எனக்கும் குணத்தில் வேறுபாடில்லை. ஆனால் நடத் தையில் பொய், சூது, வஞ்சகம், பொருமை, பொல் லாங்கு இப்படிப்பட்ட எத்தனையோ தீய எண்ணங் கள் மனிதப் பிறவி எடுத்த எனக்குள்ளே நடமாடு கிறது. புழுவுக்கு அந்தப் பொய் சூது வாது ஒன் றுமே தெரியாது. குணத்தில் புழுவுக்கும் எனக்கும் ஒரே நிலை. ஆனல் கொள்கையில் வேறுபாடு நிறைய இருக்கிறது. புழுவிற்கு எனக்குள்ள கெட்ட எண் ணங்கள் ஒன்றுமே இல்லை" என்று சொல்லுகிறார்.

"புழுவுக்கு இங்கு எனக்குள்ள
பொல்லாங்கு இல்லை."

"குணத்தில் ஒத்திருந்தாலும், உருவாகும் எண் ணத்தில் வேறுபாடு இருக்கிறது. பொல்லாங்கு அறி யாதது புழு; எல்லா தவறுகளையும் செய்பவன் மனி தன். உருவில் சிறியதாய் இருந்தாலும் உயர்ந்த பண்பு இருப்பதால் புழுவைவிட கேவலமானவன் மனிதன். ஒப்பிட்டுப் பார்க்கும்போது புழுவைவிட கடைசியாகச் சொல்ல வேண்டியவன் மனிதன்" என்று பாடுகின்றார்.

"புழுவிலும் கடையேன்."

'புவனத்தைப் படைத்த கடவுள் சிறு உருவ மாகப் புழுவைப் படைத்தான். அதைக் காட்டிலும்

எவ்வளவோ பெரிய உருவமாக மனிதனைப் படைத்தான். ஆனால் புழுவுக்கும், மனிதனுக்கும் உள்ள தன்மையை ஒத்திட்டுப் பார்க்கும்போது புழுவைவிடக் கேவல நிலையில் இருக்கிறான் மனிதன்' இப்படிச் சொல்லிப் புலம்பிய அப்பர், "நல்லது செய்பவர்க்கு அருள் புரியும் இறைவன் பொறுப்புள்ளவன்; புனிதன். அந்தப் புனிதத் தன்மை படைத்த கடவுளின் தொண்டையே பெரிதாகக் கருதி ஆண்டவன் புகழ் பாடும் அடியார்கள் கூட்டத்திற்குள் நான் எப்படிப் போய்ச் சேரமுடியும்? அந்தப் புனிதன் புகழ்பாடும் குழுவோடு எங்கே போய் எப்படிக் கூடுவேன்? அவர்களோடு எவ்வாறு சேருவேன்? புழுவிலும் கடையேனாக மதிக்கப்படுகின்ற நான் புனிதன் தன் குழுவுக்கு எப்படிப் பொருத்தமாவேன்? எங்கே சென்று கூடுவேன்?" என்று உள்ளம் உருக நாவுக்கரசர் பாடுகின்றார்.

"புனிதன் தமர் குழுவுக்கு
எவ்விடத்தே சென்று கூடவே."

இவ்வாறு தன்னைத் தாழ்த்திக்கொண்டு மற்றவர்களைத் தம்மிலும் உயர்த்திப் பாடுகின்றார் சைவ சமயத்தையே உயர்த்திய அப்பர் சுவாமிகள்.

இப்படிப் புழுவை உயர்த்திப் பாடிய அப்பர் சுவாமிகள் மற்றொரு பாட்டில் அப்படிப் புழுவாய் அடுத்த ஜென்மத்தில் என்னைப் பிறக்க வைத்தாலும் 'கடவுளே! உன் திருவடி வணங்குவதை மறக்காமலிருக்கும் வரத்தைக் கொடுத்துவிடு' என்று பாடுகின்றார்.

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா நின்னடி
மறவாதிருக்க வரம் தரவேண்டும்."

எப்பிறப்பு எடுத்தாலும் ஈசனுக்கு அடியானகப் பணிபுரிதல் வேண்டுமென்ற எண்ணத்தையே கொண்டவர் அப்பர்.

சிறு பொருளாயினும் பெரிதாக அதைப் பாராட்டி தன்னைத் தாழ்த்திக்கொள்வதே பெருந் தகையாளர் பண்பு என்பதை நன்கு விளக்கிக் காட்டியவர் திருநாவுக்கரசர்.

புழுவுக்கும் குணம் நான்கு எனக்கும் அதே
புழுவுக்கு இங்கு எனக்குள்ள பொல்லாங்கு இல்லை
புழுவிலும் கடையேன் புனிதன் தமர்
குழுவுக்கு எவ்விடத்தே சென்று கூடவே.

(திருநாவுக்கரசர் - தேவாரம் : ஐந்தாம் திருமுறை)

6. "தேச விளக்கு"

அஹிம்சை என்ற தத்துவத்தை அகில உலகிற்கும் எடுத்துக்காட்டி, ஆயுதங்களை எடுத்துச் சண்டையிட்டு, மக்களை அழிக்கும் வகையில் ஈடுபடாமல் சத்தியம், தருமம், சாத்வீகம், என்ற கொள்கைகளையே ஆயுதமாகக் கொண்டு அஹிம்சை என்ற நெறியில் போராடி, ஊருக்காக உண்ணு விரதம் இருந்து புனிதமான சுதந்திரத்தை வாங்கித் தந்த 'மகாத்மாவை' மாபாவி ஒருவன் சுட்டுக்கொன்றான். அன்றிரவு நேருஜி, மக்களுக்கு தம் அனுதாபத்தை அறிவிக்கும் முறையில் வானொலி நிலையத்திற்குப் பேச வந்தார். அவர் வாயிலிருந்து வந்த முதல் வார்த்தை:

"உலக ஜோதி ஒளியிழந்து விட்டது. தேச விளக்கு அணைந்து விட்டது"

இவ்வாறு உலகைக் காத்த உத்தமர்களை, தத்துவங்களை உபதேசித்த ஞானிகளை, விளக்கிற்கு ஒப்பிட்டுச் சொல்வது தொன்று தொட்டுவந்த பழக்கம்.

உத்தமர்களைப் பிறக்க வைத்து சகல உலகத்தையும் காத்து நிற்கும் கடவுளைத் திருநாவுக்கரசர் "தேச விளக்கு" என்று உயர்த்திப் பாடுகின்றார்.

பல மேடைகளில் பாட்டுக் கச்சேரி செய்யும் பாடகன் ஒருவன், பல பாட்டுக்களைப் பாடினாலும், அவனுக்கென்று அமைந்த முறையில் ஒரே ஒரு பாட்டிருக்கும்—அந்தப் பாட்டைத்தான் அவன்

எங்கு பாடச் சென்ருலும் இறுதியில் பாடச் சொல்லி எல்லோரும் கேட்பார்கள். இசைத்தட்டில் அந்தப் பாட்டை ஒலிப்பதிவு செய்து விற்பனைக்கு அனுப்பு வார்கள். ஏற்கனவே எல்லோர் மனதையும் கவர்ந்த பாட்டு அல்லவா, அது? இசைத்தட்டிலே வந்த வுடன் எங்கும் அந்தப் பாட்டின் ஓசையே கேட்டுக் கொண்டிருக்கும். அந்த இசைத்தட்டின் ஓசை ஒலிக் காத இடமே இருக்காது. இப்படிப் பாட்டுக் கச்சேரி செய்யும் ஒரு பாடகனின் பாட்டே வீட்டுக்கு வீடு கேட்குமானுல், அந்தப் பாட்டிற்கும் மூலப் பொருளாய் விலகும் நாதத்திற்கே தலைவனுய் இசைக்கு முதல் வனுய் விளங்கியவன் ஈசனல்லவா? அந்தப் பரமனின் அருளினுல்தானே நம் உள்ளிருந்து ஓசையும் ஒலியும் பிறக்கிறது. அவன் கருணையால்தானே நாதமும் இசையும் உலகில் உலவுகிறது. ஆகவேதான் அப்பர் சுவாமிகள் சொல்லுகின்ருர்—உலகில் எங்கும் கேட் கும் 'ஓசை, ஒலி, எல்லாம் நீயே' என்று இறைவனைப் பாடுகின்ருர்.

"ஓசை ஒலியெலாம் ஆனுய் நீயே"

கேட்கும் ஓசை, ஒலி, எல்லாம் நீயே என்று இறைவனைக் குறிப்பிட்டார். நடிப்புத் தொழிலில் பலர் தேர்ச்சி பெற்றிருந்தாலும், பரிசு கொடுப்ப தென்று முடிவுகட்டி அதற்குத் தகுதியுள்ளவர்கள் யார் என்று நிர்ணயிக்கும்போது சிறந்த நடிகர் என்று ஒருவருக்குத்தான் பரிசளிக்கிருர்கள். உல கிலே சிறந்த மேதைகளுக்கு நோபல் பரிசு கொடுக் கும்போதும் அதற்குத் தகுதியுடையவர் ஒருவர்தான் என்று முடிவுகட்டிப் பரிசு அளிக்கிருர்கள். ஒவ் வொரு துறைகளில் பலர் அனுபவப்பட்டு தேர்ச்சி யடைந்திருந்தாலும் தேர்ந்தெடுக்கும் நிலைவரும்போது

ஒருவரே சிறந்தவர் என்று முடிவு கட்டுவார்கள். இவ்வாறு உலகத்தைக் காத்து நிற்பவனும் ஈசன் ஒருவன்தான். ஆகவே உலகிற்கே நீ ஒருவனாக நின்றாய் என்று அப்பர் சொல்லுகின்றார். எவ்வுலகிற்கும் நீ ஒருவனே இறைவன். ஆகவே மக்கள் வாழும் உலகுக்கு ஒருவனாய் நின்றவனும் நீயே என்று பாடுகிறான்.

"உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே''

'ஓசை, ஒலியும் நீ, உலகிற்கும் ஒருவனும் நீ' என்று உள்ளமுருகச் சொல்லுகின்றார். பூமாலை சூட்டிக் கடவுளை வணங்கும் பெண்கள், வாடிக்கையாக மலர்களைத் தொடுத்து மாலை கட்டிக்கொண்டு வருபவரிடம் 'நேற்று நீ கட்டி வந்த மாலையில் நல்ல வாசனை இருந்தது. நாளையும் அதே மாதிரி மாலை தொடுத்துக்கொண்டு வா' என்று சொல்வார்கள். ஆனால் மணத்தை யார் கொடுக்கிறார்கள்? மாலை தொடுத்தவனா மணம் கொடுக்கிறான்? இல்லை. மனிதர்களைப் படைக்கும் ஈசன்தான் மலர்களுக்கு மணம் அளிக்கிறான்.

ஆகவே 'மலர்களெல்லாம் நீயே, உன்னருள் இன்றி அவைகளுக்கு மணம் ஏது?, என்று பரவசப்பட்டு வியந்து பாடுகிறார் திருநாவுக்கரசர்.

"வாச மலரெலாம் ஆனாய் நீயே''

'ஓசையும் ஒலியும் நீ உலகிற்கு ஒருவன் நீ வாசனையுள்ள மலரும் நீ' என்று வாய் இனிக்கப் பாடுகின்றார்.

பெரிய வீட்டில் பெண் எடுத்த மாப்பிள்ளையைப்பற்றி எப்படி என்று சிலர் பிரியமாகக் கேட்பார்கள். அதற்கு விவரம் தெரிந்தவர்கள்

பெருமையாகப் பெண் வீட்டைப் புகழ்ந்து சொல் வார்கள். 'வெள்ளிமலை எஸ்டேட்டிற்கு சொந்தக் காரராய் இருப்பவரின் மாப்பிள்ளை, அவருக்கென் னய்யா குறைவு?' என்பார்கள். பெண்ணின் தகப் பனுர் பெரிய செல்வந்தராக இருந்தால் இன்னுர் மாப்பிள்ளை என்று மாமனுர் பெயரை முதலில் சொல்லிப் பின் மருமகனைப் பாராட்டுவார்கள். அதைப்போல—நாடாண்ட மலையத்துவஜன் என்ற பாண்டிய மன்னனுக்கு மகளாகப் பிறந்த பார்வதியை மணந்த மருமகன் நீயே என்று ஈசனைக் குறிப்பிடு கின்ருர் அப்பர்.

"மலையான் மருகனுய் நின்ருய் நீயே"

ஓசை, ஒலி நீ. உலகுக்கு ஒருவன் நீ. வாசனை யுள்ள மலரெல்லாம் நீ. பெரிய இடத்து மாப்பிள்ளை யும் நீ என்ருர்.

தமிழ் இலக்கியத்தை நன்ருகக் கற்று உணர்ந்த ஒரு பெரும் புலவர் இனிமையாகப்பேசி, எளிய நடை யில் எல்லோருக்கும் புரியும்படி இலக்கியச் சொற் பொழிவு செய்தால், பிரசங்கத்தைக் கேட்டு முடித்து வீட்டுக்குச் செல்லுபவர்கள் "ஆஹா, விளக்கமாக இலக்கியத்தைப் பேசுவதில் இவருக்கிணை எவருமே யில்லை" என்று பேசிக்கொண்டே போவார்கள். நெருங்கிய நண்பர்கள் அவர் வீட்டிற்குச் சென்று நேரடியாகவே புகழ்வார்கள். 'அய்யா! இன்று உங்கள் பேச்சு வெகு பிரமாதம். பேசுவதற்குத் தகுதியுள்ளவர் தாங்களே. பேசுவதில் பெரிதும் இனிமையாகப் பேசுபவர் நீங்களே' என்று பாராட்டு வார்கள்.

ஆனுல் உலகில் இவ்வாறு எத்தனையோ புலவர் கள் பேசுவதற்கு வித்தாக உள்ளவன் இறைவன்.

முழு முதல் கடவுள் மொழிக்கு வழி வகுத்தவரல்லவா? தமிழ் மொழி வளர்ச்சி குன்றிப்போகும் என உணர்ந்து அகத்தியனைத் தென்னாட்டிற்கு அனுப்பிய தெய்வமல்லவா? ஆகவே பேச்சுக்கும் மொழிக்கும் எழுத்துக்கும் மூல புருஷன் ஈசன்தானே.

ஆகையால் பேசுவதற்குப் பெரிதும் இனிமையானவன் நீயே என்று ஈசனைப் புகழ்கிறார் அப்பர் சுவாமிகள்.

"பேசப்பெரிதும் இனியாய் நீயே"

ஓசை ஒலி நீ என்றார், உலகுக்கு ஒருவன் நீ என்றார், வாசனை மலரெல்லாம் நீயே என்றார், பெரிய இடத்து மாப்பிள்ளையும் நீதான் என்றார், பிறகு பேசுவதற்கே பெரிதும் இனிமையானவன் நீயேதான் என்று பாடுகின்றார்.

பள்ளிப் பருவத்தில் இருக்கும் மாணவன் வித்தைகளைக் கற்றபின் ஆசிரியர் கால்களில் விழுந்து வணங்கி அவர் ஆசியைப் பெறுவான். குடும்ப வாழ்க்கை நடத்தப்போகும் மணமக்கள், பெற்றோர் காலில் விழுந்து வணங்கி நல்லாசியைப் பெறுவார்கள். இப்படி உலகில் ஒவ்வொருவரும் அவரவர்களுக்கு பெரியோர்களாய் விளங்குகின்றவர்கள் திருவடிகளில் பணிந்து வணங்குவார்கள். ஆனால் அப்பர் சுவாமிகள் ஆண்டவனுக்குத் தொண்டனாகப் பணியாற்றியவர், ஆகையால் தலைவனாக என்மேல் திருவடிகளை வைத்தவன் நீயே என்று இறைவனைக் குறிப்பிடுகின்றார்.

"பிரானாய் அடி என்மேல் வைத்தாய் நீயே."

இவ்வாறு சகலமும் நீயே என்று பாடிக் கொண்டே வந்த நாவுக்கரசர்—இன்னும் பாட்டை

நீட்டிக்கொண்டு போகவிரும்பாமல் முடிக்க நினைக்கிருர். எப்படி? ஒளி இல்லை என்ருல் உலகமில்லை. வெளிச்சம் இல்லையேல் எதுவுமே இல்லை. ஆகையால் சுடர்விட்டு எரியும் தீபமெல்லாம் நீயே, தேசத்தில் உள்ள விளக்கெல்லாம் நீயே என்று சொல்கிருர்.

"தேச விளக்கெலாம் ஆனுய் நீயே"

நீயே உலக விளக்கு, நீயே அருட்பெரும் சோதி என்று பாடிக்கொண்டு வந்த அப்பர் சுவாமிகள் திருவையாறு என்ற ஊரை விட்டு என்றும் நீங்காத பொன் விளக்காக நின்று விட்டாய் என்கிருர்! புண்ணிய பூமியில் வீற்றிருக்கும் தீபமே "தேசத்திற்கெல்லாம் விளக்காக நின்ற நீ திருவையாறைவிட்டு நீங்காத பொன் விளக்காக வீற்றிருக்கிருய்" என்று திருவையாற்று இறைவனைப் புகழ்ந்து பாடுகின்ருர்.

"திருவையாறு அகலாத செம்பொற் சோதி!"

தேச விளக்கு, பொன் விளக்கு என்றெல்லாம் தெய்வத்தைப் புகழ்ந்த நாவுக்கரசரை, சைவ விளக்கேற்றி வைத்தவர் என்று நம்முடைய தமிழகம் போற்றுவதில் வியப்பென்ன?

ஓசை ஒலியெலாம் ஆனுய் நீயே
உலகுக்கு ஒருவனுய் நின்ருய் நீயே
வாசமலரெலாம் ஆனுய் நீயே
மலையான் மருகனுய் நின்ருய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானுய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனுய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதி!

(திருநாவுக்கரசர் - தேவாரம்: ஆரும் திருமுறை

7. "கணக்கு வழக்கு"

ஒரு இரும்புத் தொழிற்சாலையில், துண்டு துண்டாகிப்போன இரும்புகளை எல்லாம் ஒன்று சேர்த்துப் பத்தவைக்கும் தொழிலில் பாடுபட்டு ஒரு பாட்டாளி உழைத்து வந்தான். துண்டான இரும்புகளை ஒட்டவைக்கும்போது உண்டாகிற வெளிச்சத்தினுலும் தன் உடலைச்சரிவர கவனித்துக் கொள்ளாததினுலும் அந்தத் தொழிலாளிக்குக் கண் பார்வை போய்விட்டது. மேற்கொண்டு அவன் செய்து கொண்டிருந்த .தொழிலைச் செய்ய முடியவில்லை. கண்ணிழந்தபின் வாழ்வில்லை, வலுவில்லை, வாழ்வில் ஒளியுமில்லை, தன் கண்களுக்கும் பார்வையில்லை.

இந்த நிலையில் அவன் பாடுபட்டு உழைத்த முதலாளியுடன் போகிருன். "அய்யா இன்று நான் உங்கள் தொழிற்சாலைக்கு உபயோகப் படாமல் போனுலும் ஒரு காலத்தில் உழைத்தவன். அதனுல் உங்களுக்கும் எனக்கும் உறவு என்றும் உண்டு. நீங்கள் முதலாளி, நான் தொழிலாளி என்ற பந்தம் நமக்குள் என்றும் உண்டு. அதை இல்லையென்று நீங்கள் மறுக்க முடியாது. ஆனுல் ஏதோ என் சிரமத்திற்காகத் தங்களைக்காண வந்தேன். மனமுவந்து தற்சமயம் நீங்கள் எனக்கு ஏதாவது உபகாரம் செய்யவில்லை என்ருலும் அதற்காக உங்கள் பால் கொண்டுள்ள மரியாதை, பற்றுதல் இவைகளை மறக்கவும் மாட்டேன். தாங்களும் என்னை மறந்து விடாதீர்கள். சந்தர்ப்பம் வரும்போது நானும் உங்கள் ஸ்தாபனத்தில் உழைத்த உழைப்பாளி என்று சொல்லத் தயங்காதீர்கள். எவ்வளவோ ஆஸ்தியோடு இருக்கிறீர்கள். நான் அந்த நாளில் உழைத்த உழைப்புகளுக்

கெல்லாம் கணக்கு வழக்கே பார்க்கவில்லை. ஓயாமல் உழைத்தேன். கண் பார்வை இழந்து விட்டேன். ஆகையால் மீண்டும் எனக்குக் கண்பார்வை வர வழி செய்யுங்கள், இல்லை; முடியாது என்று நீங்கள் சொன்னாலும் இறுதி உதவி ஒன்று கேட்கிறேன். அதையாவது செய்யுங்கள். தட்டுக் கெட்டுத் தடுமாறி கீழே விழாமல் நடக்க உங்கள் கையால் ஒரு ஊன்று கோலாவது கொடுத்து ஆதரவு காட்டுங்கள். இந்த உதவியாவது கடைசியாகச் செய்யுங்கள்" என்று ஒரு பாட்டாளி வேண்டுகிறான். அவனைப் போலவே சைவத்தொண்டு புரிந்த பெரியோர்கள் நால்வரிலும் சுந்தரரும் ஒரு சமயம் தனக்குக் கண் பார்வையில்லா மல்போனது குறித்துக் கடவுளிடம் கணக்கு வழக்கு கேட்கிறார். "முக்கண் படைத்தவனே என் இரு கண்ணின் பார்வையைப் பறிப்பதுதான் உன் கணக்கு வழக்கா? ஒரு ஊன்று கோலாவது கொடுக்க மாட்டாயா?" என்று திருவொற்றியூர் ஈசனிடம் முறையிடுகிறார்.

இறைவனிடம் சுந்தரர் வேண்டுகிறார்: "என்னைப் படைத்து, மனிதனாகப் பிறக்க வைத்து உன் தொண்டனாக இருக்க வேண்டுமென்று ஆணையிட்டு, ஊரார் அறிய உனக்கும் எனக்கும் பந்தம் உண்டு என்பதை நிரூபித்து விட்டாய். உன்னோடு ஒன்றியே நிற்பவன் என்பதை உலகறியச் செய்தாய். உலகிலே மனிதப் பிறப்பாக என்னைப் பிறக்க வைத்து, உன் சுற்றத்தானாகவே படைத்து, உன்னோடு ஒன்றியிருக்கச் செய்து விட்டாய்."

"ஈன்று கொண்டது ஓர் சுற்றம் ஒன்றன்றால்"

படைத்தது உன்னைப் பாடுவதற்காக, அதிலும் பைந் தமிழில் பாடுமாறு ஆணையிட்டாய். உன் சுற்றத்

தானகப் படைத்து உன்னோடு ஒன்றியிருக்கும் நல் உறவைக் கொடுத்தாய். ஆனல் ஏதோ காரணத் தால் மறந்து என்னை இன்னலுக்காளாக்கி விட்டாய். நல்ல காலத்தை எனக்கு அளிக்க மறந்து விட்டாய். இருப்பினும் உன்பாலுள்ள அன்பில் குறைய மாட் டேன். எனக்குக் கொடுக்க வேண்டிய நல் வாழ்வை நீ கொடுக்காவிட்டாலும் உன் மீதுள்ள அன்பில் ஒரு நாளும் வெறுப்பைக் காட்டமாட்டேன். கொடுத்தால் நல்லவர் இல்லாவிட்டால் பொல்லாதவர் என்று சொல்லும் ஆள் நானல்ல. எனக்கு எதையும் தரா விட்டாலும் என் அன்புக்கு நீ என்றும் உடைய வனே."

"ஈயாராகில் என் அன்புடையார்கள்"

"உனக்கும் எனக்கும் உறவு உண்டு. ஆனல் வேண்டியவனை என்னையும் சரிவர கவனிக்கவில்லை. ஆனலும் உன் சுற்றத்தான் நான் என்பது எல்லா ருக்கும் ஒரு முறை சொல்லவாவது வேண்டாமா? பலர் பார்க்க நீயே வந்து எனக்கு அருளவேண் டிய கருணையை அளித்து விட்டால், பிறகு உன்னைப் பாடின என்னை நீயே உன் சுற்றத்தான் அல்ல என்று சொல்லமாட்டாய். மனம் இரங்கி நீ வருவது தான் கடினம். வந்து அருள் செய்ய வேண்டு மென்று முடிவு கட்டிவிட்டால் உன்னைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்த என்னை உன்பணியாள் அல்ல என்று பிறகு எங்கும் நீ சொல்லவே மாட்டாய்."

"தோன்ற நின்று அருள்செய்து அளிந்திட்டால்
சொல்லு வாரை அல்லாதன சொல்லாய்"

"என்னை உன் சொந்தக்காரனகப் படைத்தாய். நீ கவனிக்கவில்லை என்பதற்காக உன்பால் நான்

வைத்த அன்பிலும் குறைபாடில்லை. இருப்பினும் ஊரார் அறிய ஒருமுறை வந்து அருள் கொடுத்து விட்டால், பிறகு உன்னைப் பாடிய என்னை உன் ஆள் அல்லவென்று சொல்லவும் மாட்டாய். போனல் போகிறது. எனக்குக் கண் பார்வையில்லை என்பது மற்றவரை விட உனக்கு நன்ருகத் தெரியுமே! எங்களுக்கெல்லாம் இரு கண்கள், உனக்கு மூன்று கண்களாயிற்றே." சொத்தை இழந்த ஒருவன், சொத்து சுகத்தோடு வாழ்பவனிடம் உதவிக்குப் போகும் போது 'எவ்வளவு ஆஸ்தி வைத்திருக்கிருயே. அதில் சிறிதளவாவது எனக்குக் கொடேன்' என்று கேட்பான். அதேபோல் இரு கண் பார்வையிழந்த சுந்தரர் 'மூன்று கண்களோடு இருக்கிருயே' என்று ஈசனிடம் பேசுகின்ருர்.

"மூன்று கண்ணுடையாய்"

அடுத்தவர்களை எதிர்த்துப் போரிட முடியாத நிலையில் மெலிந்த சரீரமுடைய ஒருவன், பருத்த உடல் படைத்த ஒருவனைப் பார்த்து என்னைவிட மூன்று பங்கு பெருத்திருக்கிருயே, உன் பலத்தில் சிறிது எனக்குக் கொடேன் என்று கேட்பதைப் போல, "என் கண் பார்வையிழந்ததைப் பார்த்துக் கொண்டிருக்கிற நீ மூன்று கண்கள் உடையவனுயிற்றே" என்று வேண்டுகின்ருர். வழியிலே பலகாரம் வாங்கிக் கொண்டு ஒரு சிறுமி வந்தாள். காக்காய் ஒன்று வந்து கையிலே இருந்த பலகாரத்தைக் கொத்திக் கொண்டு போய்விட்டது. குழந்தை கையில் உள்ள பலகாரத்தைக் காக்கைப் பறித்துப் போவதைப் பார்த்த மற்ருெரு சிறுமி சொல்லுகிருள். நீ கையில் கொண்டு வந்த பலகாரத்தை "கணக்காக"ப் பறித்துக் கொண்டு ஓடிவிட்டது

என்றாள். பலகாரத்தைப் பறிகொடுத்த சிறுமி பதில் சொன்னாள், 'இந்தக் காக்காவிற்கு இதேதான் வழக்கம்' என்றாள்.

"கணக்காக" பறித்துக் கொண்டு ஓடுவதே "வழக்கமாக"ப் போய்விட்டது என்று சிறுமிகள் உரையாடிக் கொண்டார்கள். அதுபோலவே சுந்தரரும் சொல்லுகிறார். "உனக்கு அடியானாகத் தொண்டு செய்த என் கண் பார்வையைக் கணக்காக கொண்டு செல்வதே உனக்கு வழக்கமாக இருந்தால்...." என்கிறார்.

> "....................அடியேன்
> கண்கொள்வதே கணக்கு வழக்காகில்"

"இப்படி கணக்காக என் கண்களின் பார்வைகளை அழிப்பதே உனக்கு வழக்கமாக இருந்தால் அதை மாற்றிக் கொள்ளுங்கள் என்று நான் சொன்னாலும் கேட்கமாட்டாய். போகட்டும் மீண்டும் எனக்குக் கண்பார்வை கொடுக்கா விட்டாலும் உன்னைப் பாடிய இப்பாவி உயிரோடு நடமாடுவதற்கு ஒரு ஊன்று கோலாவது கொடு" என்று கேட்கிறார். "கண்களைக் கொடுக்காவிட்டாலும் தட்டுத் தடுமாறி கீழே விழாமல் நடக்க என்கைக்கு ஆதரவாக ஒரு ஊன்று கோலாவது கொடு" என்று கேட்கிறார்.

> "ஊன்றுகோல் எனக்காவது ஒன்றருளாய்
> ஒற்றியூர் எனும் உறைவானே."

எல்லாம் கேட்டும் ஒரு முதலாளி செய்ய மறுத்து விட்டால் இதையாவது செய்யுங்களேன் என்று பரிதாபமாக அவரிடம் வேலை செய்த பாட்டாளி வேண்டுவதைப்போல சுந்தரரும் "திருவொற்றியூர் என்னும் ஊரில் இருக்கும் இறைவனே! உன்னைப்

பாடிய எனக்கு கண் பார்வையைத் தராவிட்டாலும் கம்பு ஒன்ருவது கொடு" என்று இறைஞ்சி வேண்டு கின்ருர். ஊன்றுகோல் எனக்காவது ஒன்றருளாய் ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே கண்பார்வை தராவிட்டாலும் கைத்தடியாவது ஒன்று கொடு என்று வேண்டுகின்ருர் சுந்தரர்.

ஈன்று கொண்டது ஓர் சுற்றம் ஒன்றன்ருல்
ஈயாராகில் என் அன்புடையார்கள்
தோன்ற நின்று அருள்செய்து அளித்திட்டால்
செல்லுவாரை அல்லாதன சொல்லாய்
மூன்று கண்ணுடையாய் அடியேன்
கண் கொள்வதே கணக்கு வழக்காகில்
ஊன்று கோல் எனக்காவது ஒன்றருளாய்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே.

(சுந்தரர் - தேவாரம்: ஏழாம் திருமுறை)

8. " அம்மையே, அப்பா "

பெண்ணைப் பெற்ற பெற்றோர்கள் நல்ல மாப்பிள்ளை ஒருவருக்குத் தம் புதல்வியைத் திருமணம் செய்து வைத்து, தேவைப் பட்ட சீர் வரிசைகளைக் கொடுத்து, மாப்பிள்ளையுடன் மகளை மறு வீட்டுக்கு அனுப்பும்போது பெண்ணைப் பெற்ற தகப்பன் மருமகனின் கையைப் பிடித்துக் கொண்டு, கண்களில் நீர் கலங்க, "மாப்பிள்ளை அவர்களே! செல்லமாக வளர்த்த பெண்ணை இன்று உங்கள் கையில் ஒப்படைத்து விட்டோம். இனிமேல் எங்கள் பெண்ணிற்கு நீங்கள் தான் 'தாய் தந்தை' எல்லாம்" என்று சொல்லி, மனம் கலங்கி, மகள் கையை மருமகன் கையில் வைத்து நாங்கள் பெற்று வளர்த்து ஆளாக்கியிருந்தாலும் இனி தாங்கள்தான் பெண்ணிற்குத் தாய் தந்தை என்று சொல்வது அன்றும் இன்றும் தொன்று தொட்டு நடந்து வரும் பழக்கம்.

"உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்
........பழஞ் சொல்'' (திருவெம்பாவை)

சைவ சமயத்தை உயர்த்திய நாயன்மார்களில், படிப்போர் மனம் உருகும்படி " திருவாசகம் " பாடிய மாணிக்கவாசகரும், ஈசனை வழிபடும்போது, 'நீ தான் இனி எனக்குத் தாயும் தந்தையும்' என்று பாடுகின்றார்.

பெற்று வளர்த்து ஆளாக்கிப் பேரும், புகழும் பெருமளவிற்குப் பிள்ளைகளைப் பெற்றவர்கள்

வளர்த்தாலும், பிறர் ஒருவரிடம் பிள்ளையை ஒப்பு விக்கும் போது இனிமேல் நீங்கள் தான் பிள்ளைக்கு தாய் தந்தை சகலமும் என்று சொல்லி ஒப்புவிப் பார்கள். அதுபோல மாணிக்கவாசகரும், தன்னைப் பெற்று வளர்த்த பெற்றோர்கள் இருந்தாலும், சைவத்தொண்டு செய்யுமளவிற்குத் தன்னை ஆளாக் கிய ஈசனை தன் வாழ்வில் சகலத்தையும் இனி உனக்கே சொந்தம் என்று ஒப்புவித்த இறைவனை 'எனக்குத் தாயும் தந்தையுமாக இருப்பவனே!' என்று பாடுகின்றார்.

"அம்மையே! அப்பா!"

ஒரு பிரபல ரத்ன வியாபாரி பல வைரங்களும் நவரத்தினங்களும், பற்பல முத்துக்களும் பலவித மணிகளும் கொண்டு வந்து ஒரு செல்வந்தன் வீட் டிலே காண்பித்து, எல்லாவற்றையும் மிகையாக வர் ணித்து சகலத்தையும் ஒரே இடத்தில் விற்பனை செய்துவிடலாம் என்ற நோக்கத்தோடு வந்தாலும், எல்லாவற்றையும் செல்வந்தன் வாங்குவதில்லை. தனக்குப் பிடித்தமான ஏதாவது ஒன்றை வாங்கிக் கொண்டு, பிறரிடம் தான் வாங்கிய ரத்தினத்தைக் காட்டி, இதற்கு ஒப்பு உவமைகூற வேறு எதுவுமே இல்லை. தான் வாங்கிய பொருள் ஒப்பிலாத ரத்தினம் என்று வர்ணிப்பது வழக்கம். அது போலவே உல குக்கு ஒருவனாய் நிற்கும் இறைவனை, ஒப்பு இல்லாத மணியே என்று பாடுகின்றார்.

"ஒப்பிலா மணியே!"

குழந்தையைப் பெற்ற தாய் அது கொஞ்சிப் பேசுவதை எல்லாம் கேட்டுப் பூரிப்படைவாள். குழந்தை மழலைமொழி பேசும் போது அன்னை

மவுனமாக இருந்து ரசிப்பாள். பின் அந்தக் குழந்தை மவுனமாக உறங்கும் போது அதன் பெருமைகளை எல்லாம் சொல்லிப் பிரியமாகத் தாலாட்டுப் பாடுவாள் "ஆராரோ—ஆரிராரோ, ஆரமுதே ஆராரோ" என்றெல்லாம் பாடிப் பாராட்டுவாள். தன் அன்பையெல்லாம் குழந்தை மேல் வைத்திருப்பாள். "ஆரமுதே உன் அன்புக்கு இணை ஏது?" என்றெல்லாம் பாடுவாள். அதே போல் மாணிக்கவாசகரும் ஈசனை "அன்பிற்கு உறைவிடமான கடவுளே ஆரமுதே" என்று பாடுகின்றார்.

"அன்பினில் விளைந்த ஆரமுதே!"

ஏதாவது ஒன்றை ஊர்ஜிதம் செய்து பேச வேண்டும் என்று நினைத்தால் (ஏ)காரம் போட்டுப் பேசுவது எல்லோருக்கும் இயல்பு. ஒரு பொருளை ஒருவர் எனக்கு வேண்டும் என்று கேட்டால் தேவைப் படும் அளவுக்கு வைத்துக் கொண்டு பிறகு திருப்பித் தந்துவிடுவார் என்று பொருள். அது எனக்(கே) வேண்டும் என்று (ஏ)காரம் போட்டுக் கேட்டால் தனக்கே உரிமையாக்கிக் கொள்ள வேண்டும் என்று அர்த்தம் தென்படுகிறது. அதே போல் ஒரு முதலாளியிடம் அவருக்கு வேண்டிய நண்பர் ஒருவர் ஒரு வேலைக்காரனைச் சிபாரிசு செய்வதற்கு அழைத்துப் போனால் அந்த ஊழியனைப் பற்றிய ஒழுக்கங்களைச் சொல்லும்போது இவன் உண்மை(யே) பேசுவான் என்று (ஏ)காரம் போட்டுச் சொன்னால், பொய்களைக் கனவிலும் நினைக்கமாட்டான் என்று பொருள் படுகிறது. நாட்டிற்கு நன்மைகளை விரிவாக்கி உண்மைகளைப் பெருக்கி உலகத்தின் நிலையை உயர்த்துவதற்காகவே இறைவன் ஒவ்வொரு மனிதனையும் படைக்கிறார். ஆனால் மனிதர்களில் சிலர்

மாறுபட்ட கருத்திலும் நடமாடுகிருர்கள். இதை மாணிக்கவாசகர் பிறர் மேல் சொல்லாமல் தன்னையே தாழ்த்தி அவையடக்கமாகச் சொல்கிருர். உண்மைகளைப் பெருக்கி பொய்களைச் சுருக்குவதற்காக இறைவன் என்னைப் படைத்தான். ஆனல் நான் உண்மை ஒன்றுகூடச் சொல்லாமல் பொய்களை(யே) பெருக்கிக் கொண்டிருந்தேன் என்று (ஏ)காரம் போட்டுச் சொல்லுகிருர். பொய்யை(யே) என்று (ஏ)காரம் போட்டுச் சொல்லி உண்மையை சிந்திக்கவே இல்லை என்று பொருள் படக் கூறுகின்ருர். நற்காரியங்கள் எதுவும் செய்யாமல் பொய்யையே பேசுகின்றேன் என்று தன்னைக் குற்றவாளியாக்கிப் பாடுகின்ருர்.

"பொய்ம்மையே பெருக்கி"

பொய்களையே பெருக்கிக் கொண்டிருந்தேன் என்று பாடும் மாணிக்கவாசகர் தான் பொழுதைக் கழித்த விபரத்தைச் சொல்கிருர். காலை, நடுப்பகல் மாலை, இரவு என்று நீண்டு செல்லும் பொழுதை நல்ல காரியங்களைச் செய்து விரிவாக்கிக் கொள்ளாமல் பொய்களையே சொல்லிப் பொழுதைச் சுருக்கிக் கொண்டேன் என்று சொல்கிருர். சுருக்க வேண்டிய பொய்களைப் பெருக்கி, பெருக்க வேண்டிய பொழுதைச் சுருக்கினேன் என்று பாடுகின்ருர்.

"பொழுதினைச் சுருக்கும்"

உண்மையைப் பரப்பி பொழுதினைப் பெருக்க இறைவன் மனிதனை அறிவுள்ளவனுகப் படைத்து அவன் தலையில் மூளையை வைத்தான்! சைவத் தொண்டு புரியும் மாணிக்கவாசகர் தான் செய்த தொண்டையெல்லாம் உயர்த்திப் பாடாமல் தன்னைத்

தாழ்த்தியே பாடிக் காட்டுகின்றார். உண்மை பேசி உலகில் வாழ மூளையுள்ள மனிதனாக என்னைப் படைத்தாய். ஆனால் பொய்களைப் பெருக்கி பொழுதினைச் சுருக்கும் தலையில் மூளை எப்படி இருக்கும்? பொய்களைப் பேசும் தலையில் மூளைக்கு பதில் புழுக்கள்தான் சஞ்சரிக்க முடியும். பொய்களைப் பெருக்கி புழுக்களைத் தலைக்குள் வைத்திருக்கும் கேடுகெட்ட மனிதனாயிருக்கின்றேன் என்று தன்னைத் தாழ்த்திப் பாடுகின்றார்.

" புழுத்தலைப் புலையனேன் "

ஒரு ஸ்தாபனத்தில் ஊழியம் செய்யும் தொழிலாளி ஒருவன் மன்னிக்க முடியாத தவறுகளைச் செய்திருந்தாலும் பெருந் தன்மை நல்ல குணம் படைத்த அந்த ஸ்தாபனத்தின் முதலாளி அவனை அழைத்து, 'தவறு செய்திருந்தாலும் உன்னை மன்னித்து விட்டேன். தொடர்ந்து நீ ஊழியனாகவே என் ஸ்தாபனத்தில் இருக்கலாம்' என்று சொன்னால் குற்றம் செய்த தொழிலாளி மிகவும் மகிழ்ச்சி அடைந்து தன் முதலாளியைப் பற்றிப் பெருமையாகப் பேசுவான். 'எத்தனையோ தவறுகளைச் செய்தேன். அதையெல்லாம் மன்னித்து எனக்கும் மீண்டும் வேலை கொடுத்து ஆதரித்தார் முதலாளி. அவர் வள்ளல்; பொறுமையின் செல்வம்; பண்புள்ள பெருமகனார்' என்று முதலாளியை வாழ்த்துவான். அதேபோல் மாணிக்கவாசகரும் சொல்லுகின்றார்: "பொய்களைப் பெருக்கி பொழுதினைச் சுருக்கி புழுக்களைத் தலையில் சுமந்து கொண்டிருந்த எனக்கும் செம்மையாக சிவபதத்தைக் கொடுத்த செல்வம் சிவபெருமான்" என்றெல்லாம் பாடுகின்றார்.

"..................தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவ பெருமானே!"

மலர்கள் நிறைந்த பூங்காவிலே தலைவியும் தலைவனும் செடிகள் மறைவிலே மறைந்து விளையாடி ஒருவர் கண்களில் ஒருவர் தென்படாமல் ஒருவர் பிடிக்கு ஒருவர் அகப்படாமல் நீண்ட நேரம் விளையாடிக் கொண்டிருக்கும்போது எதிர்பாராத விதமாகத் தலைவியின் கைக்குத் தலைவன் கிடைத்து விட்டால் காதலன் கைகளைக் காதலி கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "இப்போது வசமாக என் கையில் அகப்பட்டுக் கொண்டீர்கள். கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். இனிமேல் எங்கு தப்பிப் போவீர்கள்?" என்று தலைவி கேட்பாள். அதைப்போல் இறைவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் பாவித்து நாயகன் நாயகி பாவத்தில் மாணிக்கவாசகரும் பாடுகிறார். "இறைவனே! எத்தனையோ நாள் வந்து வந்து போகின்றீர்கள். என் கைப் பிடிக்கு அகப்படாமல் என்னை ஏமாற்றி விட்டீர்கள். இம்மைக்கும் மறுமைக்கும் வழி காட்டும் இறைவனே! இன்று வசமாக என் கைப்பிடியில் சிக்கிக் கொண்டீர்கள். உங்களை நானும் சிக்கெனப் பிடித்துக்கொண்டேன். இனி நீர் எங்கே எழுந்து போக முடியும்?" என்று பாடுகின்றார்.

"இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே!"

இவ்வாறு தன்னைத் தாழ்த்திக்கொண்டு இறைவன் பக்தி வழியைப் பின்பற்றுகிறார் நமக்கு சைவப்பற்றை உண்டாக்கிய மாணிக்கவாசகர்.

அம்மையே ! அப்பா ! ஒப்பிலாமணியே !
அன்பினில் விளைந்த ஆரமுதே !
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே ! சிவபெருமானே !
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே !

(மாணிக்கவாசகர் - திருவாசகம் : எட்டாந்திருமுறை)

9. "செய்யாயோ அருள்"

பல்லாயிரக் கணக்கான புலவர்களால் பாராட்டப்படும் முத்தொள்ளாயிரம் என்னும் இலக்கிய நூலில் பாண்டிய மன்னனைப் பற்றிப் பல பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவைகளில் ஒவ்வொன்றும் மதிப்பிட முடியாத மாணிக்கங்கள். (பாண்டியன் - கைக்கிளையில்) பாண்டிய மன்னன் ஒரு நாள் வீதி வழியாக உலா வருகிறான். தன் பரிவாரங்களோடு பவனி வரும் பாண்டியன் மேல் காதல் கொண்ட பாவை ஒருத்தி, வீதி வழியே தன் உள்ளத்தைக் கொள்ளைக்கொண்ட ஊராளும் மன்னவன் உலா வருகிறான் என்பதைத் தெரிந்துகொண்டு, இன்று நன்றாக வேந்தனை உற்றுப்பார்த்து கண்களாலேயே பேசி தன் காதலைத் தெரிவித்துவிட வேண்டுமென்று உறுதிப்படுத்திக் கொண்டாள். மெல்ல எழுந்து வெளியே வந்தாள், பாண்டியனைப் பார்க்க வேண்டு மென்ற நோக்கத்தோடு தலையை நிமிர்த்த எண்ணினாள். பெண்மைக்குள்ள நாணம் வந்து தடை செய்ய தலையைக் குனிந்து கொண்டாள்.

மீண்டும் ஒருவாறு தன்னைத் தைர்யப்படுத்திக் கொண்டு, தலைவனை இம்முறை நன்றாகப் பார்த்து விடவேண்டுமென்று தலையை உயர்த்திப் பார்த்தாள். அதற்குள் தரணியாளும் மன்னன் தன் வீட்டைக் கடந்து அடுத்த வீட்டுக்கருகே சென்று கொண்டிருந்தான். நாணத்தால் நம் காதலனைக் கண்கள் காணக் கொடுத்து வைக்கவில்லையே என்ற ஏக்கத்துடன் வேகமாக வீட்டிற்குள்ளே வந்து மஞ்சத்திலே சாய்ந்தாள். தன் மடமையை நினைத்து வருந்தினாள். வேந்தன் வீதிவழியே உலா வருவதைக்காண

வெளியே விரைவில் செல் என்றது ஆர்வம், தலைவனைப் பார் என்றது மனம், தலையை நிமிர்த்து என்றது காதலின் வேகம், அனைத்தையும் தடுத்து விட்டதே இந்தப் பாழும் நாணம் என்று நங்கை அழுதுகொண்டே அயர்ந்து தூங்கிவிட்டாள்.

சொப்பனத்தில் மீண்டும் பாண்டியனைக் கண்டாள். பக்கத்திலே சென்றாள். ஆசைதீரக் கண்களால் பார்த்தாள். தலைவன் அழகைப் பருகினாள், நாணமோ பயமோ எதுவும் தடைசெய்யவேயில்லை. நன்றாக நாடாளும் மன்னனைக் கண்ணிமை கொட்டாமல் கண்டாள்; பின் ஒருவாறு திருப்தியடைந்தாள். காண நாணப்பட்ட கண்கள் இப்போது கடமையை ஒழுங்காகச் செய்துவிட்டது என்று மகிழ்ச்சி அடைந்து கண்களை கைகளால் தொட்டு மூத்தமிடச் சென்றாள். திடுக்கிட்டு கண் விழித்தாள், தான் கண்டது "கனவு" என்று அப்போதுதான் உணர்ந்தாள். நாணமின்றி பாண்டியனைக் கண்டது கனவில் தான் என்று புரிந்துகொண்டாள். தன் கண்களைத் தானே நொந்துகொண்டாள். நினைவிலே வரும் தலைவனை காணக் கண்கள் நாணப்படுகிறது, அதே தலைவன் கனவிலே வந்தால் கண்ணிமை கொட்டாமல் பார்க்கிறது, என்ன கண்கள் என்று எண்ணியவாறு சோகமாக எழுந்து கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். அதேசமயம் தன் ஆருயிர்த் தோழி வந்தாள்.

மஞ்சத்திலே மனநிம்மதியின்றி அமர்ந்திருப்பதைத் தெரிந்து கொண்டு விபரம் கேட்டாள். நனவில் பாண்டியனைக் காணக் கண்கள் மறுக்கிறது, கனவில் இமை கொட்டாமல் கண்டு இன்புறுகிறது. இப்படிப்பட்ட என் கண்களுக்கு பாண்டிய மன்னன் கண்களின் அருள் கிடைக்குமா? என்று தலைவி வேதனைப் படுகிறாள்.

கனவை நனவென்று எதிர்விழிக்கும் காணும்
நனவில் எதிர்விழிக்க நாணும் - புனையிழாய்
என்கண் இவையானுல் எவ்வாருே மாமாறன்
தன் கண்ணருள் பெருமா தான். (பாண்டியன் - கைக்கிளை)

(முத்தொள்ளாயிரம்)

தலைவன் அருள் செய்வானோ என்று தலைவி கேட்பதை முத்தொள்ளாயிரம் விளக்கிவிட்டது இவ்வாறு பரமன் அருள் செய்வானோ என்று பக்தன் ஏங்குவதை, சைவத்திருமுறையிலே ஒன்பதாம் திருமுறையால் வகுக்கப்பட்ட திருவிசைப்பா திருப்பல்லாண்டில் கருவூர்த்தேவர், உலகாளும் இறைவன் உலா வரும்போது உருகிய மனத்தோடு பக்தன் பரமனைப் பார்த்து கண்ணீரைப் பெருக்கி அருள் செய்வானோ என்று ஏங்குவதை அழகாகப் பாடிக் காட்டுகின்ருர். பக்தியோடு பரமனைத் துதிக்கும் பக்தனைத்தான் இறைவன் சற்று கடுமையாகச் சோதிக்க ஆரம்பித்து விடுகிருன். துயரம் என்பதை அறியாத உள்ளத்தவனை துன்பப் படும்படி சோதிப்பான் என்று பக்தன் கூறும் பாவனையில் கருவூர்த்தேவர் பாடுகின்ருர். நையாத மனத்தினை வேண்டுமென்றே நைவிப்பதுதான் இந்த ஆண்டவனுக்கு பழக்கம் என்ருர்.

"நையாத மனத்தினை நைவிப்பான்"

நலிவடையாத உள்ளமுடையவனை இன்னலுக்கு ஆளாக்கிப்பார்ப்பான் என்ருர். ஏனப்படி பக்தன் நொந்து சொல்லும் பாவனையில் பாடலை அமைத்திருக்கிருர் என்பதற்குக் காரணம் இல்லாமலிருக்குமா? திரைலோக்கிய சுந்தரம் என்னும் ஊரில் ஒருநாள் தெருவழியே ஈசன் உலா வந்தார். உலகாளும் இறைவன் உலா வருகிருர் என்பதைக்

கேள்விப்பட்ட ஒரு பக்தன் உடனே சென்று பார்த்தான். பரவசப்பட்டான். பிறகு பரமனைக்கண்ட அன்றைய தினத்திலிருந்து இன்றுவரை இறைவனை நினைத்து நினைத்து கையராத் தொழுது சதா அருவி போல கண்களில் கண்ணீரைப் பெருக்கி உருகுகிறான். ஆனல் ஆண்டவன் அருள் செய்யவில்லை. அதனல் பக்தன் மனம் புண்பட்டுச் சொல்கிறான். கையாரத்தொழுதாலும் கண்ணீரைக்கொட்டினுலும் செய்யாயோ அருள் என்று பக்தன் கேள்வி கேட்கிறான். இந்தப் பாவனையில் கருவூர்த்தேவர் பாடுகின்றார்.

........................" இத்தெருவே
ஐயா நீ உலாப் போந்த அன்று முதல் இன்றுவரை
கையாரத் தொழுது அருவி கண்ணரைச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே"

என்று உருக்கமாகப் பக்தன் வேண்டும் பாவனையில் பாடுகின்றார். தெருவிலே உலாவந்த இறைவனைக் கண்டு தினந்தோறும் தொழுது, கண்ணீர் விட்டாலும் அருள் செய்ய மாட்டேனென்கிறார். திரைலோக்கிய சுந்தரனே உன்பால் அன்பு செலுத்துபவர்களை இப்படி இன்னல் படுத்துவதுதான் உனக்குப் பழக்கமா என்றெல்லாம் உரிமையோடு பக்தன் பரமனிடம் அருள் செய்ய மாட்டாயோ? என்று வேண்டும் பாவனையில் கருவூர்த்தேவர் உருக்கமாகப் பாடிக் காட்டுகின்றார்.

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுது அருவி கண்ணரைச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்திரைலோக்கிய சுந்தரனே.

(கருவூர்த்தேவர் - திருவிசையப்பா: ஒன்பதாம் திருமுறை)

10. "உத்தமர் உள்ளம்"

உலகம் என்ற நாடக சாலையில் மனிதர்கள் என்ற பல நடிகர்கள் தோன்றுகின்றனர். பற்பல விதமான வேடங்களைத் தாங்கி அற்புதமாக நடிக்கின்றனர். சிலர் நல்ல பாத்திரங்களாக நடிக்கின்றனர். சிலர் தீய பாத்திரங்களாகவே திகழ்கின்றனர். இறுதியில் அவரவர்கள் போட்ட வேடங்களைக் கலைத்து நாடகத்தை முடித்து விடுகிறார்கள். இப்படிப் பல கோடி மக்கள் நடமாடும் உலகில் ஏதோ ஒரு கோடியில் உத்தமர் பிறக்கிறார்கள். ஓயாது துன்பத்தை ஏற்றுக்கொண்டு உலகிற்கு நன்மைகளைச் செய்வார்கள். சொல்லடி கல்லடியெல்லாம் பட்டாலும் துன்பத்தை வெளிக் காட்டாது சொன்ன சொல்லைக் காத்து எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவார்கள். பிறர் பழித்தாலும் அவமானப் படுத்தினாலும் அனைத்தையும் தாங்கிக்கொள்ளும் இதயம் படைத்தவர்கள். அந்தப் பண்பட்ட உள்ளத்தைத் தான் உத்தமர் உள்ளம் என்று சொல்லுகிறோம்.

தீராத வியாதி பிடித்த மனிதன் ஒருவன்; அவனைத் தீண்டவும் மற்றவர் மனது உடன்படவில்லை. ஆனால், அந்த நோய் பிடித்தவனோடும் அருவருப்பின்றிப் பழகி அவனோடு அமர்ந்து இருந்து அவனுக்கு ஆறுதல் சொல்லுமளவுக்கு மனதை பக்குவப்படுத்திக் கொண்டவர் உள்ளத்தைதான் "உத்தமர் உள்ளம்" என்கிறோம். இப்படிப்பட்ட உள்ளம் படைத்த உத்தமர் உலகிலே பல நூற்றாண்டுகளுக்கொரு முறைதான் அவதரிகின்றனர்.

உண்மைக்குப் பாடுபடுகின்றனர், உயர்ந்த லட்சியத்தை உலகெங்கும் பரப்புகின்றனர்; உலகில் வந்த காரியத்தை முடிக்கின்றனர்; பின் முடிந்து விடுகின்றனர். அப்படி உயர்ந்த உள்ளம் படைத்த உத்தமர் நமது சகாப்தத்திலே யாரென்று கேட்டால், எல்லோரும் சேர்ந்து ஒரு குரலாய்ச் சொல்லுவோம் எங்கள் மகாத்மாவென்று. கருணைமூர்த்தி காந்தி மகாத்மாதான் கண்கண்ட கடவுள் என்று கண்டோர் கேட்டோர் அனைவரும் சொல்லத் தவறவே மாட்டார்கள்.

புத்தர் வரலாறு படித்தோம். புரிந்துகொண்டோம். புறக்கண்ணால் காண முடியவில்லை. இயேசு கிறிஸ்துவின் இதயத்தைப் பற்றி இன்றும் கேட்கிறோம். இரு கண்களால் காணக் கொடுத்து வைக்கவில்லை.

ஆனால் அண்ணல் மகாத்மாவைப் பார்த்தோம். இன்று படிக்கிறோம். சத்தியத்தைக் கடைப்பிடித்த உத்தமர் காந்தி, உலகிற்கே நல்வழி காட்டிய மகாத்மா. அவரின் உள்ளம் "உத்தமர் உள்ளம்" என்றால் அது சிறிதும் மிகையாகாது. காந்தி மகாத்மா ஏதாவது பலனைக் கருதி தன்னைப் பயன்படுத்திக் கொண்டாரா? இல்லை. எதையும் அவர் உள்ளம் எதிர்பார்க்கவேயில்லை. அதற்கு என்ன காரணம்? பற்றைவிட்டார், பந்தம் பாசம் என்ற தொடர்பை விட்டார். பற்றற்ற ஞானியாகவே இருந்தார். மனதை அடக்கினார். அவர் உள்ளத்தை உத்தமர் உள்ளம் என்று ஓயாமல் பாராட்டுகிறோம். இவ்வாறு ஒரு நிலைக்கு வந்துவிட்ட பின், உத்தமர் உள்ளம் எதற்கும் அஞ்சுவதில்லை என்று, பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தைப் பாடிய திருமூல

றும் ஒரு பாட்டிலே உத்தமர் உள்ளத்தைப் பற்றிச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார். மகாத்மாவைப்போல், திருமூலர் ஒரு உத்தமர் உள்ளத்தைத் தெளிவாக விளக்கிக் காட்டுகிறார்.

பணம், வாணிபம், பந்தம், பாசம், அனைத்திற்கும் கட்டுப்பட்டு குடும்ப வாழ்க்கை நடத்தி வந்தார் பட்டினத்தார். பாலன் ஒருவனைப் பொன் கொடுத்து வாங்கி வளர்க்கலானார். தங்கக் கட்டியென்று தான் வாயால் கொஞ்சுவதற்குத் தங்கக் கட்டிகளையே தானமாகக் கொடுத்து ஒரு ஆண் மகனை வாங்கினார். பாராட்டிச் சீராட்டி வளர்த்து ஆளாக்கினார். பாசமெல்லாம் அந்தப் பாலகன் மேல் வைத்திருந்தார். பணத்தை நிறையக் கொடுத்து வாணிபம் செய்வதற்கு, வளர்த்த மகனை அனுப்பினார். ஆசைக்குரிய மகன் அன்று போனவன் திரும்பவேயில்லை. மீண்டும் பாலனைப் பார்க்கும் பாக்யம் பட்டினத்து அடிகளுக்கு இல்லை. பாசக்கட்டு அவிழ்ந்தது. பந்தமெல்லாம் அறுந்தது; துறவு நிலை கொண்டார். தாயிருக்க, மனையாள் இருக்க தவவேடம் பூண்டார். மனதில் மைந்தனைப் பற்றி ஏதேதோ கனவுகளெல்லாம் கண்டு கொண்டிருந்தார். எண்ணத்தை விரிவாக்கினார். மைந்தன் திரும்பவில்லை என்று தெரிந்தது. விரிந்த மனது ஒடுங்கிவிட்டது. பந்தம் பாசம் என்ற இடத்தையெல்லாம் விட்டு ஒரு நிலையான இடத்தைப் பெற்றுவிட்டார். இதே நிலையைத்தான் திருமூலரும் குறிப்பிடுகிறார். மனதை ஒடுக்கிவிட்டால் ஒரு நிலையான இடத்தை மனிதன் பெற்று விடுகிறான். பின் அவன் உள்ளம், மனித உள்ளமில்லை. உத்தமன் உள்ளமாகி விடுகிறது ஒடுங்கி ஒரு நிலை பெற்று விடுகிறது உத்தமர் உள்ளம்.

" ஒடுங்கி நிலை பெற்ற உத்தமர் உள்ளம் "

இவ்வாறு ஒடுங்கி ஒரு நிலை பெற்றுவிட்ட உத்தமர் உள்ளம் எதற்கும் அஞ்சுவதில்லை. எதைக் கண்டும் நடுங்குவதில்லை. வாய்மையும் மரபும் காக்க உயிர் விட்ட தயரதன் அரசவையிலே பலரறிய தன் திரு மகன் ராமனுக்கு முடிசூட்டு விழாவை நிர்ணயித் தான். பின் ஆவலோடு தன் ஆசை மகன் ராமனை அழைத்தான். நாளை சூரிய உதயத்தில் உனக்கு முடிசூட்டு விழா என்றான். திருமகன் முகத்திலே மகிழ்ச்சியுமில்லை. வருத்தமும் இல்லை. முதல் நாள் தந்தையார் அழைத்து முடிசூடி நாடாள வேண்டு மென்றார். மறுநாள் சிற்றன்னை அழைத்து தவ வேடம் பூண்டு பதினன்கு வருடம் காடாள வேண்டும் என்றார். அப்போதும் முகத்தில் எவ்வித அதிர்ச் சியுமில்லை. பெரிய மகிழ்ச்சிக்குரிய விஷயத்தைச் சொன்னாலும் பேரானந்தமில்லை. திடுக்கிடும் தகவலை அறிவித்தாலும் நடுக்கமுமில்லை இதற்கு என்ன காரணம்?

ஒடுங்கி ஒரு நிலைபெற்ற உத்தமனின் உள்ளம் எதற்கும் நடுங்குவதேயில்லை. இதையே திருமூலரும் " மனதை ஒடுக்கி ஒரு நிலைபெற்றுவிட்ட உத்தமனின் உள்ளம் எந்த சம்பவத்தைப் பார்த்தாலும் கேட் டாலும் நடுங்குவதில்லை " என்கிறார்.

" நடுங்குவதில்லை "

ஒடுங்கி ஒரு நிலைக்கு வந்துவிட்ட உத்தமன் உள்ளம் நடுக்கம் கொள்ளவில்லை, ஆனால் உயிருக்கு அஞ்சுவார்களோ? அதுவுமில்லை. பிரார்த்தனைக் கூடத்திற்கு வரும் மகாத்மாவின் ஆவியைப் போக்கு வதற்கென்றே கோட்ஸே கையில் துப்பாக்கியுடன் காத்திருந்தான். அண்ணல் வந்தார், கோட்ஸே

அவர்முன் சென்று நின்று இரு கைகூப்பி வணக்கம் செலுத்திவிட்டுப் பின் உள்ளே ஒளித்து வைத்திருந்த துப்பாக்கியைக் கையில் எடுத்தான். உயிரைக் கொல்லும் கருவி ஒன்று அவன் கையிலெடுத்ததைக் காந்தி மகாத்மா கண்ட பின்பு, அய்யோ என்னைக் கொல்லாதேயென்று கத்தினுரா? கொல்ல ஒருவன் துப்பாக்கி எடுக்கிருன், இவனைப் பிடியுங்கள் என்று கூடியிருந்த மக்களிடம் முறையிட்டாரா? இல்லவே யில்லை, ஏன்? உயிரைப் பற்றிய கவலையே காந்தியடிகளுக்கில்லை. பாதகன் துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்ட குண்டுகள் மூன்றையும் தன் மார்பிலேயே வாங்கிக் கொண்டார். அய்யோ இந்தப்பாவி என்னைக்கொன்றுவிட்டானே யென்று அலறினுரா? இல்லை. "ராமா! ராமா!" என்றுர். காரணம் என்ன? ஒரு முடிவுக்கு வந்து விட்டபின் உயிரைப் பற்றிய கவலை உத்தமர்களுக்கு ஏது? எம பயம் அவர்களுக்கு இல்லவேயில்லை. இதைத்தான் திருமூலர் குறிப்பிடுகிருர். ஒடுங்கி ஒரு நிலைபெற்ற உத்தமர் உள்ளம் நடுங்குவதுமில்லை நமனும் அங்கில்லை என்றுர். உயிரைப் பறித்துப் போகும் காலனின் எண்ணமே அவர்கள் மனத்தில்லை. ஆகையால் எமனும் அங்கு இல்லை என்கிருர்.

"நமனும் அங்கில்லை"

உத்தமர் உள்ளம் நடுக்கம் கொள்வதுமில்லை, நமன் வந்து ஆவியைக்கொண்டு பேவானேயென்ற பயமும் அவர்களுக்கில்லை. பின் துன்பத்தைக் கண்டு அஞ்சுவார்களா? அந்த பயமும் அவர்களுக்கில்லை. நாடாளும் வயோதிகத் தந்தை தன் இரு மைந்தர் களையும் உட்காரவைத்துக் கொண்டு, சோதிடம் பார்ப்பவனை அழைத்துவரச் சொல்லி, இரு மைந்தர்

களின் வருங்கால பலனைச் சொல்லச் சொன்னான். சோதிடத்தைப் பார்த்தவர் சோதனைக்குரிய ஒரு விஷயத்தை வெளியிட்டார். இரு மைந்தர்களில் தலை மகனைவிட இளைய மகன் பலாபலன்களே உயர்வாக இருக்கிறது. வருங்காலத்தில் உலகாளும் வல்லமை இளைய மகனுக்கே இருக்கிறது என்று சோதிடன் சொன்னான். இளையவன் சிந்தித்தான். அண்ணனிருக்க நமக்குத்தான் ஆளும் வல்லமை இருப்பதாகச் சோதிடன் கூறிவிட்டான். ஆனால் முதல்வன் இருக்க இளையவன் ஆட்சி செலுத்துவதா? ஒருக்காலும் கூடாது, தமையனே தரணி ஆளவேண்டும், தான் தவவேடம் பூண்டு வனம் செல்ல வேண்டுமென்று முடிவுகட்டி, அக்கணமே துறவியாகக்காட்சியளித்தான்.

அப்படிக் காட்சி அளித்த அடிகள்தான் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தை அருளிச்செய்த இளங்கோவடிகள். அண்ணன் சேரன் செங்குட்டுவன் புவியரசு ஆனான். தம்பி இளங்கோவடிகள் கவியரசு ஆனார். பின் உலகப் புகழ் பெற்றார். ஆட்சி செலுத்தும் அண்ணனுவது மக்கள் நிலை, ஆட்சியின் முறை, என்று பல பொறுப்புகளுக்கு உரியவனானன். அவனுக்காவது துன்பங்களும் தொல்லைகளும் வந்தது. ஆனால் துறவு பூண்ட இளங்கோவடிகளுக்கு எந்தத் துன்பமுமில்லை. இரவென்றும் பகலென்றும் ஒரு நேரமில்லை. இதைத்தான் உத்தமர் உள்ளத்திற்கு துன்பம் என்று ஒன்றில்லை, இடும்பையுமில்லை என்று குறிப்பிட்ட திருமூலர் இரவென்றும் பகலென்றும் உத்தமர் உள்ளத்திற்கு இல்லை என்று பாடுகின்றார்.

" இடும்பையுமில்லை இராப்பகல் இல்லை "

துன்பமில்லை துயில்கொள்ள இரவோ தொழில் செய்யப் பகலோ என்று உத்தமர்களுக்கு இல்லை என்று சொல்கிறார். பின் ஏதாவது பலனை எதிர் பார்க்கிறார்களா? அதனால் வந்தடையும் பயனை அநு பவிக்கிறார்களா? அதுவுமில்லை. உலகுக்கு உயர்ந்த நீதியைப் புகட்ட வந்தவர்கள் எப் பயனையும் கருதிப் பாடுபடுவதில்லை. ஆகையால் அநுபவிப்பதற்குப் பயனுமில்லை. திறமையில்லாத ஒரு நண்பன், முடி யாத ஒரு காரியத்தைத் துவக்குகிறேன் என்று சொன்னால், 'வேண்டாம், கடைசியில் நீ கஷ்டப்படு வாய்' என்று எச்சரிப்பதுண்டு. அதை யெல்லாம் காதில் வாங்கிக்கொள்ளாது அந்தத் திறமையில்லாத நண்பன், ஒருவருக்கும் தெரியாது தன் திட்டப்படிக் காரியத்தைத் துவக்கிவிடுவான். இறுதியில் நஷ்ட மடைவான். முதலில் கலந்து ஆலோசித்த நண்ப னிடம் வருவான். உன் பேச்சைக் கேளாமல் என் திட்டப்படிக் காரியத்தைத் துவக்கி நஷ்டப்பட்டுவிட் டேன் என்று வருந்துவான். இதைக் கேட்டு ஆத்திர மடைந்து யோசனை சொன்ன நண்பன் 'என் பேச் சைக் கேட்டாயா? படு, அநுபவி' என்று திட்டு வான். அநுபவி என்று சொல்வதற்கு படு என்று சொல்வதும் வழக்கம். இதையே திருமூலரும் அநுப விக்கும் பயனில்லை என்பதை படும் பயனுமில்லை என் கிறார்.

"படும் பயன் இல்லை"

அந்தப் பயமும் உத்தமர்களுக்கு ஏன் வருவ தில்லை? காரணமில்லாமல் இருக்குமா? பயமின்றி வாழ்வதற்குப் பற்றை மறக்கவேண்டும். பற்றுதலை ஒதுக்கிவிட்டால் எந்தப் பயமும் இல்லை என்று திரு மூலர் பாடுகிறார். பற்றை விட்டவர்களே உத்தமர்

களாக முடியும். அவர்கள்தான் எதற்கும் அஞ்சாமல் இருப்பார்கள். ஆகவே பற்றுதலை விட்டவர்களே அதற்கு அருகதையானவர்கள் என்கிறார்.

" பற்று விட்டோர்க்கே "

ஒடுங்கி நிலை பெற்றுவிட்ட உத்தமர் உள்ளம் நடுக்கம் கொள்வதில்லை, நமன் வருவானே என்று அஞ்சுவதில்லை. துன்பம் வருமேயென்று துயர்படுவதில்லை. இரவு பகல் என்ற சிந்தனையுமில்லை படும் பயன் எதுவுமில்லை. இவ்வளவும் யாருக்கு? பற்று விட்டவர்க்கே என்கிறார் திருமூலர்.

ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவதில்லை நமனும் அங்கில்லை
இடும்பையுமில்லை இராப்பகல் இல்லை
படும்பயன் இல்லை பற்று விட்டோர்க்கே.

(திருமூலர்-திருமந்திரம் : பத்தாம் திருமுறை)

11. " அன்பு அமைத்தேன் "

சேர சோழ பாண்டியரும், பல்லவரும் தமிழகத்தை ஆட்சி செலுத்திய நாளிலே அவரவர்கள் மன இச்சைப்படி கோபுரம் அமைத்தார்கள். கலை மண்டபம் கட்டினர்கள். சிற்பிகள் கற்பனைக்கு எட்டியவாறெல்லாம் கட்டிடங்களை கண்ணுக்கழகாக அமைத்தார்கள். அக்காலத்தில் வாழ்ந்த பெரும் புலவர்களும் காவியம் இயற்றினர்கள்; கவிதைகள் புனைந்தார்கள். உலகமே போற்றும் காப்பியங்களையும் அமைத்தார்கள். இப்படி சக்தியுள்ளவர்களும் சகல வசதி உள்ளவர்களும் அவரவர்கள் இச்சைப்படி அழியாத சின்னங்களை அமைத்தார்கள். ஆனல் சைவ சமயத்தை உயர்த்திய நாயன்மார்களில் ஒருவரான சேரமான் பெருமாள் நாயனர் பதினேரும் திருமுறையில், அவர் பாடிய பொன்வண்ணத்தந்தாதியில் உலகிற்கு இறைவனய் விளங்கும் ஈசனுக்குத் தன் உடலையும் உடலில் அடங்கிய அவயவயங்களையும் உள்ளத்தையும் ஆண்டவனுக்குப் பணிபுரியும் வகையில் எவ்வாறு அமைத்துக்கொண்டார் என்பதை அழகாகப் பாடிக் காட்டுகிறர். பணவசதியுள்ளவர்கள் தங்கள் மூதாதையர்களுக்குப் பலவிதமான ஞாபகச் சின்னங்களை அமைத்தார்கள். ஆனல் பக்திவழி பின்பற்றிய சேரமான் பெருமாள் நாயனர் ஆண்டவனுக்கு அன்பு அமைத்த விதத்தை அற்புதமாகப் பாடிக் காட்டுகிறர்.

மகான்களின் ஞாபகச் சின்னமாக மண்டபங்கள் அமைப்பது வழக்கம். அப்படி மண்டபங்களை

அமைப்பதற்கு முன்பு அதைக் கட்டி முடிக்கும் சிற்பி களை அழைத்து மண்டபம் எப்படி இருக்கவேண்டும் என்ற விதத்தையும் விளக்கமாகச் சொல்லிவிட்டால் சிற்பிகள் அற்புதமாகச் கட்டிமுடித்து விடுகிறார்கள். அதற்குப்பின் பார்வையிடப் பலரை அழைத்துப் போய் மண்டபத்தைக் காட்டும்போது, அதைக் கட்டி யவர்கள் மண்டபத்திற்குள் உள்ள ஒவ்வொரு இடங் களையும் காட்டி இந்த இடம் பிரார்த்தனைக்காக அமைத்தேன். அடுத்த இடம் பெரியவர்கள் யாராவது சொற்பொழிவு செய்வதற்காக அமைத்தேன் என்று ஒவ்வொரு இடத்தையும் என்ன குறிக்கோளில் அமைத்தார்களோ அந்த விபரத்தை பார்வையிடச் செல்பவர்களிடம் இன்னென்ன வகைக்காக இந்த இடங்களை அமைத்தேன் என்று சொல்வது வழக்கம். இதேபோல் சேரமான் பெருமாள் நாயனாரும் தன் மனத்தை எதற்காக அமைத்துக் கொண்டார் என்ற விபரத்தைச் சொல்கிறார். ஈசனைப் பற்றிச் சிந்திக்க உள்ளத்தை அமைத்துக்கொண்டார். அவன் திருக் கருணையை எண்ணிப்பார்க்க, மனத்தை அமைத்துக் கொண்டேன் என்கிறார். சிந்தனை செய்வதற்காகவே மனத்தை அமைத்துக் கொண்டேன் என்று பாடு கிறார்.

"சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்."

சிந்திக்க மனதை அமைத்துக்கொண்டார். சிந் தனையில் உருவாகும் செய்திகளை வெளியே சொல்ல வேண்டாமா? அதனால் சிந்திக்க மனத்தை அமைத்த சேரமான் பெருமாள் நாயனார், சிந்தனையில் சிவனைப் பற்றி உருவாகும் எண்ணங்களையே செப்புவதற்காக நாக்கை அமைத்துக்கொண்டேன் என்கிறார்.

"செப்ப நா அமைத்தேன்."

சிந்திக்க மனத்தை அமைத்துவிட்டார். அந்த சிந்தனையில் உருவாகும் செய்திகளை வெளியிட நாக்கை அமைத்துவிட்டார். மற்றும் உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புகளுக்கும் ஒவ்வொரு வேலை கொடுக்கிறார் எப்படி? எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம் என்பது பெரியோர் வாக்கு. உடலுக்குப் பிரதானம் தலை. அந்தத் தலையை வணங்குவதற்காக அமைத்துக்கொண்டேன் என்கிறார். குனிந்து வந்தனத்தைத் தெரியப்படுத்துவதற்காக தலையை அமைத்துக்கொண்டேன் என்று பாடுகிறார்.

"வந்தனை செய்யத் தலை அமைத்தேன்."

சிந்திக்க மனத்தை அமைத்துக் கொண்டார்; செப்புவதற்கு நாக்கை அமைத்துக் கொண்டார்; வந்தனம் செய்யத் தலையை அமைத்துக்கொண்டார். தலை வணங்கினால் மட்டும் போதுமா? இரண்டு கைகளையும் கூப்பி அஞ்சலி செலுத்தவேண்டாமா? இரு கைகளையும் கூப்பி ஈசனைத் தொழுதால்தானே இப் பிறப்புக்கு நல்வழி காட்டுவான். ஆகவே தொழுது அஞ்சலி செய்யக் கைகளை அமைத்தேன் என்று பாடுகிறார்.

"கை தொழ அமைத்தேன்."

இறைவனைச் சிந்திக்க மனத்தை அமைத்தார்; செப்புவதற்கு நாக்கை அமைத்துக்கொண்டார்; வந்தனை செய்யத் தலையை அமைத்துக்கொண்டார்; வணக்கம் சொல்லித் தொழுவதற்குக் கைகளை அமைத்துக்கொண்டார். இவ்வளவும் அமைத்துக் கொண்டது எதற்கு? இறைவனுக்கு அடியான் என்ற உறவைத் தேடிக்கொள்ளத் தானே? அந்தச் சொந்தம் ஏற்பட எதை அமைப்பது என்று யோசித்தார்.

பரமனுக்கும் தனக்கும் பந்தம் ஏற்பட உள்ளத்தில் அன்பை அமைத்துக் கொண்டதாகச் சொல்கிறார். சொந்தம் என்ற பந்தம் உருவாக அன்பு அமைத்தேன் என்று நெஞ்சுருகிப் பாடுகிறார்.

"பந்தனை செய்வதற்கு அன்பு அமைத்தேன்."

பந்தம் ஏற்படுத்த அன்பை அமைத்துவிட்டார். ஆனால் அந்த அன்பு உண்மையான அன்பாய் இருக்க வேண்டுமல்லவா? மெய்யான அன்பு இருந்தால் தானே இறைவனின் தொண்டனாக இருந்து மெய் ஞானம் அடையமுடியும். ஆகையால் அன்பை அமைத்தவர் அது தூய்மையாக இருக்கவேண்டு மென்று எண்ணி மெய்யை வளரவிட்டேன் என்று மனம் கனிந்து பாடுகிறார்.

"மெய் அரும்ப வைத்தேன்."

சிந்திக்க மனமும், செப்ப நாவும், வந்தனை செய்யத் தலையும், தொழுவதற்குக் கரங்களும், பந்தம் ஏற்படுத்திக்கொள்ள அன்பும், அந்த அன்பு வளர மெய்யையும் அமைத்ததெல்லாம் யாருக்காக, ஊருக்காகவா? இல்லை, உலகைக் காக்கும் ஈசனுக்காக. இவைகளை யெல்லாம் அமைத்துக் கொண்டேன் என்று பாடுகிறார். சுடுசாம்பலை திருநீறாக அணிந்த ஈசனுக்காக இவைகளை யெல்லாம் நான் அமைத்துக் கொண்டேன் என்று பாடுகிறார்.

"வெந்த வெண்ணீறணி ஈசற்கு
இவையான் விதித்தனவே."

என்ன செய்தாலும் எல்லாம் தன்னைக் காக்கும் ஈசனுக்காகவே என்று பாடுகிறார். கையும் மெய்யும் தலையும் நாவும் அன்பும் அனைத்தும் ஆண்டவனுக்கே

அர்ப்பணம் என்று சேரமான் பெருமாள் நாயனர் பாடுகிருர்.

சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்
செப்ப நா அமைத்தேன்
வந்தனை செய்யத் தலை அமைத்தேன்
கை தொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற்கு அன்பு அமைத்தேன்
மெய் அரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசற்கு
இவை யான் விதித்தனவே.

(சேரமான் பெருமாள் நாயனர்—பதினேரும் திருமுறை)

—பொன் வண்ணத் தந்தாதி

12. "வீணையின் ஓசை"

குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதார் என்பது தெய்வப் புலவராம் திருவள்ளுவர் வாக்கு. மழலை மொழி பேசி பெற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உற்சாகத்தை ஊட்டும் குழந்தைகள் இல்லாத வீட்டில் அந்த மழலை மொழிக்குப்பதில் இன்பந்தருவது குழலின் ஓசை அல்லது வீணையின் ஓசை; வீணை, வேணு, மத்தளம் இவைகளே. முதலில் தோன்றிய வாத்தியக் கருவிகளாகும். இதில் வாணியின் கையில் வைத்திருப்பது வீணை. கலைவாணியின் கையிலேயே இடம் பெற்றுவிட்டது என்ருல் அந்த வீணையின் நாதத்தை விவரிக்க வேண்டுமா? அமரகவி பாரதியும் அழகாகக் குறிப்பிடுகின்ருர்.

> நல்லதோர் வீணை செய்தே—அதை
> நலங் கெட புழுதியில் எறிவதுண்டோ
> சொல்லடி சிவசக்தி

என்று வீணையை வைத்து மகாகவி மிகச் சிறப்பாகப் பாடியுள்ளார்.

கவிக் சக்ரவர்த்தி கம்பர் பெருமான் தான் அருளிய ராமகாவியத்தின் சுந்தர காண்டத்தில் சொல்லுகிருர். ராமபிரானுக்குத் தூதனுய் விளங்கிய அநுமான் சீதாபிராட்டியைத் தேடும் பொருட்டு தென் திசைக்குச் சென்றவன் தென்னிலங்கைக்குள் நுழைந்தவுடன் அந்த நகரில் உள்ள சிறப்பை எல்லாம் கண்டு வியப்படைவதாக கற்பனை செய்கிருர் கம்பர் பெருமான். இலங்கை மக்கள் வீட்டில் எந்த

நேரமும் மகரவீணையின் ஓசை கேட்டுக் கொண்டே இருந்ததாம். ஆழ்கடல் அலை ஓசையை அடக்கி அதற்கு மேல் மகர வீணையின் ஓசையே இலங்கை எங்கும் கேட்டது என்று வீணையின் சிறப்பைக் கவிச் சக்கரவர்த்தி புகழ்கிருர்.

"மகர வீணையின் மந்திர கீதத்து
மறைந்த சகர வேலையினுர்கலி"

என்று இலங்கையில் அலைஓசையை விட மிகை யாய் வீணையின் ஓசையே கேட்டது என்று கம்பர் பெருமான் குறிப்பிடுகின்ருர். இதேபோல் சைவத் திருமுறைகளில் பனிரெண்டாம் திருமுறைகளில் பாடிய சேக்கிழார் சுவாமிகள் திருநகரச் சிறப்பிலே ஈசன் குடிகொண்டிருக்கும் திருநகரத்தில் வீணையின் ஓசை கேட்டதைப் பற்றி மகிழ்ந்து பாடுகின்ருர்.

வேதத்திற்குத் தலைவனுக விளங்கிய வேத நாயகன் வாழும் திருநகரத்தில் அடியார்களெல்லாம் எந்த நேரமும் வேதத்தை ஓதிக்கொண்டே இருப்ப தால் அந்த வேதத்தின் ஓசை ஒலித்துக்கொண்டே இருந்தது என்று குறிப்பிடுகின்ருர்.

"வேத ஓசையும்"

வேத ஓசை மட்டும் ஒலித்தால் போதுமா? நாதத்திற்கே தலைவனுய் நிற்கும் நாதபிரம்மத்திற்கு இசையின் ஓசையும் கேட்டால்தானே இன்பம் பொங்கும். ஆகையால் வீணையின் ஓசையும் ஒலித் துக்கொண்டே இருந்ததாம்.

"வீணையின் ஓசையும்"

வேதத்தின் ஓசையைக் குறிப்பிட்டார். வீணை யின் ஓசையையும் பாடி விட்டார். ஆனல் பலமுறை

தீயவர்களால் தொல்லைகளுக்குள் அகப்பட்ட வானவர்கள் ஈசனைப் பாடாமலிருப்பார்களா? ஒவ்வொரு முறையும் தேவர்களுக்கு இன்னல் வந்தபோது எதிர் நின்று காத்த இறைவனை தோத்திரமல்லவா செய்வார்கள்? ஆகையால் ஒளி பொருந்திய வானவர்களெல்லாம் தோத்திரம் செய்யும் ஓசையும் ஒலித்துக் கொண்டே இருந்ததாம்.

"சோதி வானவர் தோத்திர ஓசையும்"

வேதத்தின் இசை, வீணையின் நாதம், வானவர் தோத்திரம் செய்யும் ஓசை அனைத்தும் கேட்கும் இறைவன் அரங்கத்தில் ஆனந்தமாக ஆடும் தெய்வமல்லவா?

மணியும் முழவுமாகத் திருத்தாண்டவம் ஆடிய தெய்வமல்லவா? அப்படிப்பட்ட இறைவன் குடிகொண்ட திருநகரில் ஆட்டமில்லாமலிருக்க முடியுமா?

மணி ஓசையும் முழவின் ஓசையும் ஒலிக்க அதற்கேற்றாற்போல் மாதர்கள் ஆடிக்கொண்டிருக்கின்றனராம்.

பெண்கள் ஆடுவதற்கு ஏற்றாற்போல் மணிமுழவோசை கேட்கிறதாம்!

மாதர் ஆடல் மணிமுழ ஓசையும்

வேதம், வீணை, தேவர்கள் தோத்திரம், மாதர்கள் நடனம், மணிமுழ வோசை இத்தனையுடன் சேர்ந்து இறைவனைப் போற்றிப் பாடும் கீத ஓசையும் கேட்டதாம். கீதத்தால் பாடி இறைவனின் கருணை பெற எல்லோரும் பிரார்த்தனை செய்தனர் என்று சேக்கிழார் சுவாமி பரவசத்துடன் பாடுகின்றார்.

"கீத இசையும் ஆய்க்கிளர் வுற்றவே"

வேதமும், வீணையின் நாதமும், வானவர் தோத்திரமும், மாதர்கள் ஆட்டமும், மணிமுழ ஓசையும் கீதத்தின் ஒலியும் சேர்ந்து ஒலித்துக் கொண்டிருந்ததாக திருநகரத்தின் சிறப்பை விளக்குகிறார்.

வேத ஓசையும், வீணையின் ஓசையும்
சோதிவானவர் தோத்திர ஓசையும்
மாதர் ஆடல் மணிமுழ ஓசையும்
கீத ஓசையும் ஆய்க்கிளர் வுற்றவே.

சேக்கிழார் சுவாமி - திருநகரச்சிறப்பு

(திருத்தொண்டர் புராணம்: பன்னிரண்டாம் திருமுறை)

திருத்தங்கள்

பிழை	திருத்தம்	பக்கம்	வரி
பாடுவார்	பாடுவர்	3	2
உனும்	எனும்	28	7
உனும்	எனும்	28	18
விலகும்	விளங்கும்	35	11
முதலாளியுடன்	முதலாளியிடம்	40	13
திருமுறையால்	திருமுறையாய்	55	10
இசையும்	ஓசையும்	73	1